உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உக.] ருதிரோற்காரி-ஞு சித்திரை-மீ [பகுதி சு.
Vol. XXI. April–May–1923. No. 6.

## புறநானூறு.

### (இரண்டாம்பதிப்பு.)

இந்நூலின்பெருமையையும், உரையின்பெருமையையும், அவற்றைப் பரிசோதித்து அச்சிற் பதிப்பித்துதவிய ஸ்ரீமாந். மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்களுடைய ஒப்புயர்வற்ற கல்வியறி வூக்க முழைப்புக்களையும் அறிந்தவர்கள் இப்பதிப்பின்மதிப்பைத் துதிப்பொருட்டாகக்கொள்ளார்களென் றெண்ணுகிறேன். ஐயரவர்களால் இந்நூல் இற்றைக்குச் சற்றேறத்தாழ முப்பதுவருடங்கட்கு முன்னமே அரிதிற் பரிசோதித் தச்சிடப்பட்டு முதற்பதிப்பாக வெளிப்பட்டிருந்தது. அதைப்படித்தவர்களுக்கெல்லாம், ஐயரவர்கள் கல்வியறிவாராய்ச்சிகளின்பயனை உலகுக் குபகரித்திருப்பது அதிசயிக்கத்தக்கதாயிற்று. அதன்பிறகு இதுகாறும் முப்பதுவருடகாலங்களாகப் பழைய அருந்தமி ழிலக்கிய இலக்கணநூல்களை யச்சிடுதற்கு ஆராய்ந்து போந்தறிந்த பலவிடயங்களாலும், பழைய உரைகளிற்கண்ட மேற்கோட்காட்சிகளாலும், பின்புகிடைத்த மூலமும் உரையும் அடங்கிய சிலபிரதிகளாலும் பல திருத்தப்பாடுற்று இவ் விரண்டாம்பதிப்புப் பதிக்கப்பட்டிருக்கிறது.

இதிற் பாடினோர்வரலாறுகளும், பாடப்பட்டோர்வரலாறுகளும் முற்பதிப்பிலுள்ள விஷயங்களோடு பலநூல்களின் ஆராய்ச்சியாலும், விசாரணையாலும் பின்பறிந்த பலவிஷயங்களும் சேர்த்தெழுதப்பட்டிருக்கின்றன. அவை பெரும்பாலும் பழையதமிழரசர் புலவர் சரித்திரங்களைக் காலக்கிரமமாக முறைப்படுத்தி யெழுதவிரும்புமவர்களுக்கும் பிறர்க்கும் மிகவும் பயன்படத்தக்கன.

இந்நூலுள்வழங்கிய பொருள்வகைகள் பலவும் எளிதி லறிந்து கொள்ளும்படி விசேடக்குறிப் பெழுதிச்சேர்த்திருப்பதோடு, பாட்டின் முதற்குறிப்பகராதியும், அரும்பதமுதலியவற்றின் அகராதியும் எழுதிச் சேர்த்திருப்பதால் இந்நூலிலுள்ள சொற்களையும் பொருள்களையும் விஷயங்களையுங் கொண்டு அவை பயின்ற பாடல்களைக் காண்பது சுலபமாயிருக்கிறது.

அன்றியும், பாட்டுக்களிலும் உரைகளிலு முள்ள பதப்பிரயோக முதலிய விஷயங்களுக்குப் பிற பலநூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டியிருக்கும் கீழ்க்குறிப்புக்களைப் பார்க்குந்தோறும், ஒருவ ராயுளள வும் பலநூல்களையும் படித்தாலும் அறிந்துகொள்ளமுடியாத பல விஷயங்களையும் எளிதி லறிந்துகொள்ளும்படிசெய்திருக்கும் ஐயரவர்களது பேருபகாரம் தமிழறிஞரால் அதிசயிக்கத்தக்கதே.

அன்றியும், உரையில்லாதிருந்த பாடல்களுக்கு இப்பதிப்பிற் குறிப்புரையெழுதிச் சேர்த்திருப்பது மிகவும் கொண்டாடத்தக்கது.

ஐயரவர்கள் இவ்வாறு தமிழுக் குழைத்துவருவதனால், குத்துயிரும் குறையுடலுமா யிறந்துபடுநிலையிற்கிடந்த பழந்தமிழ்நூல்கள் ஒன் றன்பின்னொன்றாக வுயிர்த்தெழுந் துலவுகின்றன. தமிழ்நூல் படிப்பவர்க்கு இதுகாறும் பதிப்பிப்போர் செய்யாத பல சௌகரியங்களையும் ஐயரவர்கள்பதிப்பிற் செய்துகொடுத்திருப்பது அருமைபாராட்டத் தக்கது. அவர்கள் நம் தமிழுலகின் பாக்கியமாயிருந்து பலநன்மைகளைப் புரிந்துவருகிறார்கள் என்றாலும், அந் நன்மையையுணரும் தமிழுலகம் அவர்களுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

இவ்வாறே ஒவ்வொரு தமிழ்ப்பெரும்புலவர்களும் உழைத்து வருவாராயின், இன்னும் பல தமிழ்நூல்க ளிறந்துபடாமற்காக்கலா மென்பதிற் சந்தேகமில்லை. அதற்குப் புலவர்களை ஊக்குவாரும், உப கரிப்பாரும் இல்லையென்று பலர் குறைகூறக்கேட்டிருக்கிறோம். அக் குறை ஐயரவர்களுக்கு முள்ளதே. ஆயினும், அவர்கள் தாம் அரிதிற் பயின்று பெற்ற அருந்தமிழறிவை உலகிற்குபகரிக்கவேண்டி ஊக்கங் கொண்டுழைத்துவருதல்கண்டு, அவர்களுக்குப் பொருட்கவலை சிறிது முண்டாகாதபடி பலவருடங்களாக உபகரித்துவரும் ஸ்ரீ ஸேதுஸம் ஸ்தானத் தலைவர்களும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராஸநாதி பதிகளும், சென்னைச் சட்டநிரூபணஸபையங்கத்தினர்களுமாகிய இரணியகர்ப்பயாஜி ரவிகுலதிலக முத்துவிஜய ரெகுநாத ராஜராஜேசு வர ஸேதுபதி மஹாராஜா அவர்களுடைய பேருதவி தமிழகத்தால் மிகப் பாராட்டற்பாலது.

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும், பெருமை முயற்சி தரும்" என்ற பொய்யாமொழியை மெய்யாகக்கொண்டொழுகும் ஐயாவர்க ணன்முயற்சிக்குப் பொருண்முதலியவற்றால் முட்டுப்பாடின்றி எண்ணிய கரும மினிதுமுடியுமாறு புண்ணியசீலர்கள் தாமே தண்ணளிபுரிவா ரென் றெண்ணுகிறேன்.

இனிக் கூடியவிரைவில் ஐயரவர்கள் பெருங்கதையை வெளிப் படுத்துவார்களென்று தெரிந்து மிகுந்த ஸந்தோஷமடைகிறோம்.

இவ்வா றொன்றன்மேலொன்றாக அரும்பெரும் பழந்தமிழ்நூல்களை ஆராய்ந்து அச்சிட்டுபகரித்துவரும் ஐயரவர்களுக்கு ஆயுராரோக்கியங் கள் மேன்மேல் வளர்ந்துகொண்டிருக்கும்படி எல்லாம்வல்ல இறைவன் திருவருள்பாலிக்கவேண்டுவோமாக.

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

# களப்ரரும் சங்ககாலமும்

சென்ற துந்துபியாண்டு புரட்டாசித்திங்களில் வெளிவந்த, "செந்தமிழ்"த்தொகுதி உய, பகுதி—11-லும் அதன் முன் வந்த பகுதிகளிலும் மேற்குறித்த தலைப்பெயரோடு, திருவாளர் கே. ஜி. சங்கரன் அவர்களாற் சில கொள்கைகள் நாட்டப்பெற்றிருக்கின்றன; சில கொள்கைகள் வீட்டப்பெற்றிருக்கின்றன ; அவ்வாறு நாட்டப்பெற்றவை நிலைநிற்பனவா? வீட்டப்பெற்றவை நில்லாது வீழ்வனவா? என்பதன்மேற்று இவ்வாராய்ச்சி. இக்கொள்கைகள் வேள்விக்குடிச்செப்பேடுகளிற் சொல்லப்பட்ட பொருள்களை அடியாகக்கொண்டுள்ளன என்பது அத்திருவாளர் எண்ணம்போலும். அவர்க்கும் பிறர்க்குமுள்ள கொள்கைவேறுபாட்டுக்கு அச் செப்பேடுகளிற்சொல்லிய சொற்களின் பொருள்வேறுபாடே காரணமாகலின் அவ்வேறுபட்டபொருட்கிடனுபை சொற்களின் உண்மைப்பொருள் யாவையென ஆய்வது முதற்கடனாகும்.

"அளவரிய ஆதிராசரை அகலநீக்கி அகலிடத்தைக்
களப்ரனென்னுங் கலியரைசன் கைக்கொண்டதனை இறக்கியபின்"

என்பது செப்பேட்டிலுள்ளபடி. இதில் "ஆதிராசரை" என்பது பாண்டியரை என்றே பொருள்படும். முன் "பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதியென்னும் பாண்டியாதிராசனால்" என்றும், பின்னும் "படுகடன்முளைத்த பருதிபோல பாண்டியாதிராசன் வெளிப்பட்டு" என்றும், "அற்றமில் பரவைத்தானை ஆதிராசன் அவனிசூளாமணி....மாறவர்மன்"* என்றும் பாண்டியனுக்கே அப்பெயர் வழங்கப்பட்டிருக்கின்றமையின் "நீக்கி" என்னும் வினைக்கு வினைமுதல் "கலியரைசன்" என்பதேயாம். "களப்ரன் என்னுங் கலியரைசன்" என்பதில் "களப்ரன்" எனப்படுவது ஓரரசனின் சிறப்புப்பெயராகாது சோழன் பாண்டியன் என்றாற்போல ஓரரசகுலத்தைக் குறிக்கின்றது. அக்குலத்தின்கொடுமைபற்றிக் "கலியரைசன்" என உருவகப்படுத்தி ஒருமையாற்சொல்லப்பட்டிருப்பினும், பின்

"களப்ராாலிறக்கப்பட்டது" எனப் பன்மையாய் வெளிப்படச்சொல்லப் படுதலினால், ஒருவனுக்குமேற்பட்ட பல களப்ர அரசர் அவ் வகலிடத்தை ஆண்டார்களென்பதே துணிவானபொருளாம். அன்றி, ஒரு களப்ர அரசனையே இது குறிக்குமாயின், அவனையே கடுங்கோன் வென்றானு மாயின் அவ்வுண்மை வெளியாகச் செப்பேட்டிற் சொல்லப்பட்டிருக்கும்; அவ்வாறின்றி, "கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கி........பிறர்பா லுரிமை....நீக்கி........மன்னரொளிநகரழித்த கடுங்கோன்" எனப் பொது வாகவும் பன்மையாகவும் சொல்லியிருக்கின்றபடியால் ஆதிராசரை அகல நீக்கிய களப்ர அரசனையன்று, அவனுக்குப்பின் வழித்தோன்றியவ ராயினுமாக; பிறர்வழித்தோன்றியவராயினுமாக; பிறரையே கடுங்கோன் வென்றான் என்பதுவே செம்பொருளாகும். இனி, "கைக்கொண்டதனை இறக்கியபின்" என்புழி, "கைக்கொண்டு"என்னும்வினைக்குச் செயப்படு பொருள் "அகலிடம்" என்பதும் "அதனை" என்னுஞ் சுட்டு நீடு அனு பவிக்கப்பட்ட "வேள்விக்குடி என்றப்பதி" என முன்கூறிப்போந்ததை யே சுட்டிநிற்ப தென்பதும், "இறக்கிய" என்ற வினைக்கு வினைமுதல் "கலியரைசன்" என்பதும் நேர்பொருளாக விளங்குகின்றன. "வேள்விக் குடி என்னப்பட்டது ........களப்ரரால் இறக்கப்பட்டது" என்று பின் (114-ம் வரியில்) வருகின்றமையின் யாம் காட்டிப் போந்ததே செப்பேட் டின் உண்மைக்கருத்தாகும்; மேற்குறித்த முறைவழி சொற்களைச் சேர்த்துக் கருத்தை ஆராயுமிடத்து,

(1) பாண்டியரைநீக்கின களப்ரனையே கடுங்கோன் வென்றான்;

(2) களப்ரனைநீக்கி ஆண்டவன் கடுங்கோன் ;

என்று திருவாளர் கெ. ஜி. சங்கரன் அவர்கள் கொண்டமுடிபுகளுக்கு ஆதாரத்தைக் காணேம். இவை ஆதாரமற்றவைகளாகவே வீழ்வன வாயின.

"பாண்டியரை அகலநீக்கிக் களப்ரகுலத்தினர் அகலிடத்தைக் கைக்கொண்டு வேள்விக்குடிப்பதித்தானத்தை இறக்கினர்; பின் (ஓர் காலத்து) பாண்டியாதிராசன் வெளிப்பட்டு, கடுங்கோனென்னுங்கதிர் வேற்றென்னன், அவற்குமகனாகிய மாறவர்மன், அவற்குமகனாகிய சேந்தன், அவற்குவழித்தோன்றிய மாறவர்மன், ஷ ஷ ஷ

ஷ ஷ கோன் னெடுஞ்சடையன், அவன்றன் ராச்சிய வத்ச லன் மூன்ருவது செல்லா நிற்ப......களப்ராரலிறக்கப்பட்டது என்று விஞ்ஞாப்யஞ் செய்ய" என்று செப்பேட்டின் பொருண் முடிவு நோக்குக.

இதில், "கடுங்கோன்" என்னும் பெயர்க்கு அடுத்து முன்வந்த பாண்டியாதிராசன் என்னுஞ்சொல் அவனைமாத்திரங் குறியாது பாண் டியகுலத்தைக் குறித்துநிற்பதும் நோக்கத்தக்கது; அல்லாவிடில், சொன்முடிவு பொருந்தாமை அறிக.

(3) "களப்ரன் கைக்கொண்டதை இறக்கியபின் கடுங்கோன் வெளிப்பட்டான் என்றே இருக்கிறது. இறக்கியவன் வேறு என்று குறிக்கப்படாதவரை கடுங்கோனே என்று கொள்வதே செம்பொருளாம்" என்பதும் அத் திருவாளர்முடிபு. (இதிலே இறக்கிய என்னுஞ் சொல் லுக்குச் செப்பேட்டிலில்லாத வேறுபொருள் கொள்ளுகின்ருர்.) இறக்கிய பின் வெளிப்பட்ட கடுங்கோன் எவ்வாறு அவ் விறக்கியவனுவான்? பகை வனைவென்று அரசு கைப்பற்றுதலாகிய செயலை மறையிற் செய்துமுடித் துப் பின் வெளிப்பட்டான் என்பரேல் அது இயல்புவிரோதமாகும். "வெளிப்பட்டு" என்றதன்பின்தான் கடுங்கோனின்செயல்கள் கூறப்படு கின்றன. ஆதலின் வெளிப்படாமுன் நிகழ்ந்தசெயல் பிறருடைய தென்பது துணியப்படும். "கைக்கொண்டதை இறக்கிய" என்பதற்குத் திருவாளர்கொண்ட பிழைக்கருத்தைத்தான் ஒத்துக்கொண்டாலும் இறக்கியவன் கடுங்கோனுக்குமுன்னுள்ள ஒருவனே என்பது செம்பொரு ளாம். ஆயினும், இச்செப்பேடுகள் தீட்டவேண்டிவந்தகாரணம் வேள்விக் குடிப்பதித்தானத்தைக் களப்ர ரிறக்கியதேயாமாகலின் அவ் விறக்கிய செய்தியைப் பாண்டியர் மீட்டு அரசு எய்துமுன் கூறவேண்டியது ஒரு தலையாம்; ஆதலால் இச்செய்தியையே அச்சொற்றொடர் கூறும் என யாம் தொடக்கத்திற் சொல்லியதே உண்மைக்கருத்தென்பதும், கடுங்கோனே இறக்கியவனென்று படைத்துச்சொல்லுதல் மிகவுங் கோடியபொருள் என்பதும் விளங்குகின்றது. திருவாளருடைய மேற்காட்டிய மூன்று முடிபுகளும் இவ்வாறு பிழைபடவே பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதிக் கும் களப்ரனுக்கும் கடுங்கோனுக்கும் அவர்படைத்துக்கொடுத்த கால வரையறை பெரிதும் பிழைபடுவதென்பது சொல்லாமலே விளங்கும்.

(4) திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரால், சைவனாக்கப்பெற்ற பாண்டியன் மாறவர்மனென்றும் கூறுகின்றார். அவ்வாறு கூறுதற்கு ஏதுக்கள் யாவையென்று சொன்னாரல்லர்; ஒருதலையாக அவ்வாறுகொள்ளுதற்குச் செப்பேட்டில் ஒன்றுங் காணோம். நெல்வேலிச்செருவென்ற ஒன்றேபற்றி அவ்வாறுகொண்டாரெனில், நெல்வேலியில் இந்த மாறனேயன்றி வேறு மாறனொருவனும் செருவென்றி பெறவில்லையென்பது காட்டுதல்வேண்டும். சகாத்தம் 1474 வரையில் ஒரு நெல்வேலிமாறன் இருந்ததாகப் பிற்காலப் பாண்டியரின் சாசனத்தில் தெரிந்திருப்பதனாலும், ஒருபோர்க்களத்திற் பலமுறையும் போர்நடப்பது உலகசரித்திரத்திற் புதுவதன்றாகலானும், இம்மாறவர்மனும் சைவனாக்கப்பெற்ற மாறனும் வேறாயிருக்கலாம் என்று தோற்றுகின்றது. இவ்விருவரும் ஒருவரென்பதற்கு வேறு ஏதுக்களுளவேல், தயைகூர்ந்து திருவாளர் வெளியிடுவாராயின், ஒவ்வுமாயின் அவர்கொள்கையைத் தழுவுதற்குத் தடையில்லை. இச் செப்பேட்டிலுள்ள பாண்டியர்களின் காலவரையறையைத் தீட்டியதற்கு ஆதாரம் என்ன என்பதைத் தயைகூர்ந்து வெளியிடும்படி வேண்டுகின்றேம்.

மாறவர்மனின் மெய்க்கீர்த்தியில், நாயனாரால், சைவனாக்கப்பெற்ற பாண்டியனின் சமணப்பற்றறுத்தது, சங்கம்வைத்தது முதலிய பெருஞ்செயல்கள் கூறப்படாமையானும், சோழியை வென்றதாக இச் செப்பேடுகூற, "மன்னெலா நிகழ மன்னனாய் மன்னும் மணிமுடிச் சோழன்" என்று தங்காலச் சோழனை நாயனார் குறித்துள்ளமையானும் நாயனார்காலப் பாண்டியனும் வேறு; இம் மாறவர்மனும் வேறு என்பது வலியுறும்.

மேலும், நாயனார்காலத்துப்பாண்டியன் சங்கம்வைத்தது அந் நாயனார் திருவாக்காலும், நம்பியாண்டார்நம்பிமுதலிய பின்னோர் திருவாக்காலும் அறிகின்றேமாகலினாலும் (தே. 3. திருப்பா.; ந. நம்பி. திருவா. குலச். சேக். பெரியபு.) கடைச்சங்க மிரீஇய முதற்பாண்டியன் முடத் திருமாறனென்று அச்சங்கப்புலவர்சிங்கத்தின்வழிவந்த செந்நாப்புலவர் சொல்லினாராகலானும், அம்மாறன்முடம் நிமிரும்வண்ணம் "வேந்தனுமோங்குக" என்று பாடியது அந் நாயனாரேயாகலானும், நாயனார்காலத்து வணிகமகளின் கற்புநிலையிட்ட வன்னியைக் கடைச்சங்கக் கடைப்பகுதி

யிற் பிறந்த சிலப்பதிகாரம் எடுத்துக்கூறுவதனாலும், புத்தர் சமணர் முதலியோரது பொய்களைக் கண்டித்து நால்வேதநெறியை நிலைநிறுத்தி னோர் கௌணிய கோத்திரத்து அந்தணமுன்னோர் என்று சோழன் நலங் கிள்ளிகாலத்து ஆலூர்மூலங்கிழார் சொல்வதனாலும் (புற. 166), இக் குறிப்புப் பாசமயகோளரியுங் கௌணியகோத்திரச் செல்வருமாகிய நாய னாருக்கே ஒக்குமாகலானும் சிந்தாமணியில் நாயனாருடைய தேவாரத்தி லுள்ள சொற்பொருட்களைப் பின்பற்றிக்கூறியுள்ளனபோலத் தோன்றுத லானும், நம்பிபாண்டார்நம்பிகாலத்துத் தேவாரம் பெறுதற்கருமையாய்ச் சிதல்வாய்ப்படிருந்தமை, நாயனாரால் வெல்லப்பட்டுத் தேய்ந்த சமண புத்த சமயங்கள் பின்னோர்காலத்து மேம்பட்டுவிளங்கச் சிலப்பதிகாரம் மணிமேகலை சிந்தாமணி முதலிய அச்சமயநூல்கள் மிக்குப் பயின்று வந்தமையாலாகிய கேடென்று கொள்ளலாமாகலானும், நாயனாரும் அவர் காலப் பாண்டியனும் இச் செப்பேடுகளிற் சொல்லிய பாண்டியருக்குக் குறித்தகாலத்துக்கு மிக முற்பட்டகாலத்து விளங்கியவரென்றும், அக் காலந்தான் கடைச்சங்கமுற்பகுதியாமென்றும் உய்த்துணர்ந்துகொள்ள வேண்டியதாயிருக்கின்றது. நாயனார்காலத்தை ஆராய்ந்து வரையறவு செய்யப்புகுந்த பெரியாராகிய சுந்தரம்பிள்ளை முதலியோரது ஆராய்ச்சி யெல்லாம், இன்னகாலத்துக்குப்பின் நாயனார் இருந்தாரல்லர் என்று கீழ் எல்லையை முன்னுள்ள கலங்கல் மயக்கங்களை நீக்கி நிறுவிய பயத்தவாக முடிந்தவேயல்லது, அந் நாயனார் இருந்த மேல் எல்லை நிறுவிற்றில. இது தனிமையாக ஓர் ஆராய்ச்சிக்குரியதாகலின் இவ்வளவில் எடுத்துக் கொண்டதை முடிப்பாம்.

மு. தம்பையா.

உ

# நால்வகைப்பொருள்.

நால்வகைப் பொருள்களாவன:—நந் தெய்வத்தமிழ்நூல்வல்லபெருமக்களா லெடுத்துக்கொள்ளப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடென்பனவாம். இந்நான்கும் மக்கட் குறுதிப்பொருளாம்.

அத் தமிழ்நூல்கள் எவையெனின் முத்தமிழ்க்கழகத் தான்றோராகிய பொய்யடிமையில்லாப் புலவர்கள் இயற்றிய நூல்களும், அந் நூல்களைக்கற்ற பேரறிவுடைய நல்லியற்புலவரியற்றிய நூல்களுமேயாம்.

அவ் வான்றோர் பல்லாயிரவர்குழுமி ஆயிரக்கணக்கானவாண்டுகளிருந் தியற்றிய முத்தமிழ்நூல்கள் இத்தனையெனக் கூறமுடியாதனவாயிருந்தன. அவற்றின் பெயர்முதலியனவற்றைக் களவியலுரையிற் காண்க. அவைகளிற் கடனீர்க்கிரையாயினவும்,* துருக்கர் ஆட்சிபுரியுங் காலத்து நந் தமிழகத்து நூல்களெல்லாம் அவர்கள் குரானுக் கொவ்வாமையாற் போற்றப்படாதனவு மாகி யொழிய எஞ்சியிருந்த நூல்களே யிக்காலத் துள்ளனவென் றறிக.

அந்நூல்களாற் கூறப்பட்டபொருள்கள் யாவையெனில் "ஆன்ற சிறப்பி னறம்பொரு ளின்பமென, மூன்றுவகை நுதலிய துலகம்" எனப் பன்னிருபடலத்திற் கூறியவாறு, தொகை வகை விரியாக அறம் பொருள் இன்பம் எனப்படும் மூன்றுவகைப்பொருளா மென்க. வீடு கூறவில்லையோ வெனில், வீடென்பது சிந்தையும் மொழியுஞ் செல்லாநிலைமைத் தாகலின், இவ்வாறென இலக்கணவகையாற் கூறவியலாது. காரணவகையாலு முதாரணவகையாலுங் கூறுவ துண்டென்க. ஆகவே, நால்வகைப்

---

* "ஏரண முருவம் யோக மிசைகணக் கிரதஞ் சாலந்
தாரண மறமே சந்தந் தம்பநீர் நில முலோகம்
மாரணம் பொருளென் றின்ன மான நூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரு மாள"

என்னுங் கவியை நோக்குக.

பொருளுமாமென்பது மொருவகையாகப் பொருந்துமென்க. இதனைத் திருக்குறளிலும், மெய்யுணர்தல் அவாவறுத்த லென்னு மதிகாரங்களாற் புலப்படுமா றுரைத்தார்.

ஔவையாரும், "ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங், காதலிருவர் கருத்தொன்று—யாதரவு, பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும், விட்டதே பேரின்ப வீடு" எனச் சுருக்கிக் கூறியது காண்க. எல்லா நூலுள்ளுஞ் சொல்லப்படுவன அறிவதுஞ் செய்வதுமேயன்றி வேறின்மையின் அறிவது வீடும், அறிந்து செய்யப்படுவன அறம்பொருளின்பங்களுமா மென்றுணர்க.

க. இனி, அறமாவது இல்லறந் துறவறமென விருவகையாம். அவற்று ளில்லறமாவது:—கற்புடைமனைவியுடனிருந்து, இடம்பொருளேவல் பொருந்தவைத்துத், "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லுனென்றாங்—கைம்புலத்தா றோம்ப றலை" எனக்கூறிய இவ் வைவகைநெறியும் வழுவடையா தோம்புதலாம். இவ் வைவகைநெறியும்,சிறப்பாகவைத்துக்கூறிய 'ஈதலறம்' என்பதனு ளடங்குமெனக் கொள்க. வழுவாவன—இவ் வைவகைநெறியிலே இவ்வாறு செய்கவென விதித்தனவற்றைச் செய்யாதிருத்தலும், விலக்கியனவற்றைச் செய்தலுமா மென்க. விலக்கியவை—பிறனில்விழைதல், அழுக்காறு செய்தல், வெஃகுதல், கள்ளுண்ணல், கொலைபுரிதல், பொய்கூறல், களவு செய்தன் முதலியவா மென்க.

"சிறப்புடை மரபிற் பொருளு மின்பமு—மறத்து வழிப்படூஉந் தோற்றம் போல" எனக்கூறலால், அறத்தாற் பொருளு மின்பமு மெய்தலா மென்க. இவ் வில்லறத்தை யொழுங்குறப் புரிந்து சரியைமுதலிய நால்வகைநெறியினின்று குரு லிங்க சங்கமபத்தியி னுறைத்துநிற்போர் பதமுத்தி பரமுத்தி படைவரென்பதற் கையமில்லை. அவ்வாறு நின்றடைந்த நாயன்மார்கள் பலருளர்; பெரியபுராண முதலிய நூலுட் காண்க.

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு—நல்லாற்றி னின்ற துணை" "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" "வையத்து

வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்—தெய்வத்துள் வைக்கப் படும்" எனக் கூறலால், இவ் வில்லறந் துறவறத்தினரு நன்குமதிக்கத் தக்கதாம்.

மேற்கூறிய தென்புலத்தார்முதலிய ஐம்புலத்தாரோம்புதலே ஐவகை வேள்வியென்பர் தமிழகத்துச் சைவத்திருவாளராகிய புலவர்கள். தென் புலத்தார்—அழகிய இடத்தைச்சார்ந்தவர்; உயர்பதஞ்சார்ந்தவரென்பது கருத்தாம். அவர் யாரெனில், சிவனுலகுமுதலிய பதமடைந்தோரும், சிவனடியாகிய பதமடைந்தோருமாகிய தாய் தந்தை ஆசிரியர் மெய்படியார்களாவர். அவரைக்குறித்துச் செய்யும் வேள்வியாவது அவர் உயர்பதஞ் சார்ந்தநாளிலே தெய்வம் அடியவர் முதலானவர்கட்குச் செய்யும் பூசையா மென்க. ஏனைய நான்கு மிவ்வாறே யுய்த்துணர்க. இவ் வில்லறத்தின்பெருமையை விரிக்கிற் பெருகுமாதலாற் சுருங்கவுரைத் தமை யுட்கொள்க.

துறவறமாவது:—மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து, மிக்க காம வேட்கை தீர்ந்துழி, நிலையாமையுணர்ந்து மனைவியை மகன்பால் வைத்தாயினும், உடன்கொண்டாயினும் வனத்திற்கேகித் துறவற வொழுக்கமுற்று விரத யோக ஞானங்களை யடைந்திருத்தலா மென்ப ரொருசாரார்.

இல்லறம்புரிந்தவர், இல்லிலிருந்தே யிருவகைப்பற்றுமற்றுத் துற வறநெறிநின்று விரத யோக ஞானங்களை யடைந்து, சுத்தாத்துவித பாவனையைப் பெற்றிருத்தலாமென்பர் நந் தமிழகத்துச் சைவத் திரு வாளராகிய புலவர்கள்.

இவ்வாறாதலால், கற்பழித்து மாறுபட்டிருக்கின்ற மனைவிக்கஞ்சி வெளியேகினவரும், இடம் பொருளேவல்க ளில்லாதவர்களும், வேலை செய் தூண்டு காலங்கழிக்கமாட்டாத சோம்பலுள்ளவர்களும், மாதர் புணர்ச்சிக்கு வலிமையில்லாத வுடலினருமாகிய இவர்கள் துறவற வேடம்பூண் டொழுகினால், அது துறவறமாகாதென்க.

உ. இனிப் பொருளாவது:—"தீவினைவிட்டீட்டல் பொருள்"ளெனச் சுருக்கிக் கூறினராயினும் "வடுவிலா வையத்து மன்னிய மூன்றி, னடு வண தெய்த விருதலையுமெய்தும்," "ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்

கென்போரு—ளேனை யிரண்டு மொருங்கு" என்றவாறே, அறமு மின்பமு மெய்தற் கேதுவாயிருப்பதா மென்க. அதுதான், அரசனீதி துணைக் காரணமாகக்கொண்டு அறுவகைத்தொழில்களாலு மியற்றப்படுமென்க. அறுவகைத்தொழிலாவன :—உழவு, சிற்பம், வாணிகம், வரைவு (எழுதுதல்) தொழில், வித்தை எனப் பண்டைக்காலத்தே நம்மனோர் கைக்கொண்டு நடத்திவருவனவாம். தொழில்—இவ்வைவகையின்வேறாகிய பல்வகைச் செயல்களாம்.

இவற்றுள்ளே தலைமையாயதொழில், உழவேயாம். அதன்றிறங் கூறுதும் ; எல்லாம்வல்ல இறைவன் படைத்தகாலத்தின் முதலிலே யெல்லாமக்களு மொற்றுமையாயிருந்து, சிறப்புள்ள பொதுத்தொழிலாக விவ்வுழுதொழிலைக் கைக்கொண்டு செய் துய்ந்திருந்தனர். பின்னரைவகைத்தொழிலுங் கைக்கொண்டனர். அவ்வாறு செய்தொழில் வேற்றுமையாற் சாதிகள் பலவாகப் பகுக்கப்பட்டனவென்க.

இவ் வுழுதொழிலால் விளைபயனை ஆறுகூறாக்கித் தென்புலத்தார் முதலிய வைவகைச்செலவிற்கு மைந்துகூறுவேண்டுதலால் ஐந்துகூறெடுத்துக்கொண்டு, அரசனுக் கொருகூ றுதவுவாராயினர். அதனலரசனுக் கிறைப்பொரு ளாறிலொன்று கடமையாய தென்க. அவ்வொரு கூற்றால் அரச னுலகிற்குவரு *மிடையூறாகிய மறங்கடிந் தறம்பெருக்கிக் காப்பானாயினன் ; அரச னிங்ஙனஞ்செய்தற்குக் குடிகளீயு மிறைப்பொருளு மொருகாரணமாம் ; குடிகள் பொருளீட்டித் தொகுத்து வைத்து வாழ்வதற் கரசனீதியும் ஒருகாரணமாமென்க.

பின்னர், அறிவு பலவிதமாதலால், அம் மக்களிற் பல்லோர் செய்தொழிற் சிறப்புவேற்றுமைபற்றி யுழுதொழிலைக் கைக்கொள்ளாது விட்டனர். சிலர், அவ்வுழுதொழிலை விடாது கைக்கொண்டு, எல்லார்க்கு முபகாரஞ்செய்திருந்தனராதலா லவர்கள் வேள்ளாளரெனப் பெயர்பெறுவாராயினர். (வேளாண்மை - உபகாரம்)

இவ் வுழுதொழில்விளைபயனா லெவ்வகைமக்களும், பசிவருத்தமின்றி வாழ்கின்றனர். "உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்,

---

* இடையூறைந்து:—தன்னால், தன்பரிசனத்தால், பகைத்திறத்தால், கள்வரால், ஏனை யுயிர்வருக்கங்களால் வருவன வென்க.

விட்டேமென் பார்க்கு நிலை" என்பதனு லறிக. இவ்வுழுதொழில் விளைபய னுலே, அரசன்வாழ்வுந் திருக்கோயிற்பூசையு நடைபெறுகின்றன; திருக் கோயிற்பூசை முட்டுப்படில், அரசனுக்குத தீங்குண்டாம்; மழையும் பெய்யாது; எனத் திருமந்திரத்தில், "முன்னவ னூர்கோயிற் பூசைகண் முட்டிடின், மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன் றும், கன்னங் களவு மிகுத்திடுங் காசினிக், கென்னரு ணந்தி யெடுத்துரைத் தானே" என் றெடுத்துக்கூறியது காண்க. இதனலே மழைபெய்வதற்கு வேறுகாரண மில்லை; இவ் வுழுதொழிலுந் திருக்கோவிற்பூசையுமே காரணமா மென்பதுங் காண்க.

இவ்வுழவினர் தார்க்கோலால், அரசன்செங்கோ னிலைபெறுவதெனக் கூறிய பெரும்புலவராகிய, கம்பர் உழவைச் சிறப்பித்து ஏரெழுபது என ஒரு நூலாகவே கூறினராதலால், இவ்வுழுதொழிலே யெல்லாத்தொழிற் குந் தலைமையானதொழிலென யாவருக்கும் விளக்கமாமென்க.

எல்லாத்தொழிற்கும் பழுதுண்டு, இவ்வுழுதொழிற்குப் பழு தில்லை யென்பது விளங்க "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்றார். இன்னும், "உழுவா ருலகத் தார்க் காணியஃ தாற்ரு, தெழுவாரை யெல்லாம் பொறுத்து" "சுழன்று மேர்ப் பின்ன துலக மதனு, லுழந்து முழவே தலை" எனக் கூறுமாறு காண்க. விரி வஞ்சி யிங்ஙனஞ் சுருங்கவுரைத்தமைகொண்டு உழு தொழிலே தலைமையானதொழிலாமென்க.

ஆதலாற் றீவினைவிட் டீட்டியபொருளாலே யறங்கள்பலவு மோம்ப வேண்டுமென்பதும், தீவினையாலீட்டியபொருளாற் செய்கின்ற வறங்கள் பயனுறுவென்பதுங் காண்க.

ங. இன்பமாவது:—இல்லறம் புரியுங்காலத்து, அம்மனைவிக்கு உண்ண, உடுக்க, அணியப் பூச வேண்டுவனவற்றை மனமகிழுமாறுதவி, அவளியையும்வண்ணம்புரிந்து, "பூத்துநீ ராடியநாண் முதலாகப் பன் னிருநாட் பூவை மார்க்கு, வாய்த்தகரு வுறுங்கால மாதலினு லந்நாளுண் மகமே மூலம், பார்த்தசீர் விரததினங் *தனக்காகா நாள்பஞ்ச பருவ†

* தனக்காகாநாள் - தான் பிறந்தநாள், பத்தாநாள் அப்பத்துக்குப் பத்தாநா ளென்பர்.

† பஞ்சபருவம் - மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, அமாவாசை, பௌரணை, அட்டமி யென்பர்.

மெல்லா, நீத்து நூல் விதித்ததினம் புணரானேற் கருவொன்று நீக்கினு ஞல்'' எனத் திருவானைக்காப் புராணத்திற் கூறியவாறும், ''பூவையே யனையார் தம்மிற் பூத்தநாண் முதனு ஞன்கின், மேவிடார் புணர்ச்சி பின்னை விரும்புநாள் பன்னிரண்டி, லேவுறு கருப்ப முண்டா மிங்கிதி லிரட்டி நாளாண், பாவின தொற்றை நாளேற் பெண்ணெனப் பகர்வர் தாமே'' என வுள்ளமுடையானிற் கூறியவாறுந் தெரிந்து விதித்தநாளிற் புணர்ந் தின்புறுவதாம். இதுவே ''புனைந்துரை யுலகிய லெனுந்திற மிரண்டினுந், தொல்லியல் வழாமற் சொல்லவும் படுமே'' எனக் கூறிய வாறு தொல்லியல்வழாமற் சொல்லப்பட்ட வுலகியலின்பமா மென்க. புனைந்துரை பின்வரும்.

இனி, இன்பத்தை, அகத்தே நிகழு மின்பம், புறத்தே நிகழு மின்பம் என இருவகையாக்கி, இவற்றை அகப்பொருள், புறப்பொருளென எடுத்துக்கூறி, அவற்றினொழுக்கத்தை அகத்திணை, புறத்திணையெனப் பெயரிட்டு, அகத்திணையை யெழுவகையாக்கிக் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணையெனக் கூறுவர். (கைக்கிளை - ஒருதலைக்காமம். ஐந்திணை- அன்புடைக்காமம். பெருந்திணை - பொருந்தாக்காமம்) இவற்றுள்ளே, ஐந்திணையாவன,—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தலாகிய வைந் திடத்து நிகழு மொழுக்கமாம். இவ் வைந்திணையைக் கந்தருவவழக் கத்தோ டொத்தவழக்கமாகக் கொண்டு கூறுவர். இவ் வகத்திணையின்பம் அகத்தேநிகழு மன்பினெறியா யனுபவித்தார்க்கன்றிப் புறத்தார்க்குப் புலனாகாமை யறிக. இதனை யுலகியல்வழக்கமாகக்கூறாது புலநெறி வழக்கமாகக்கொண்டு கூறுவர்.

புறத்திணை , புறம்பே நிகழு மொழுக்க வின்பமாக, அறிவிற்குப் புலனாய் வீரர் போர்க்களத்தே பெறு மின்பமாம்; இஃது, எல்லாரு மநு பவித்துப் புறத்தேயுள்ளார்க்கு மிவ்வாறிருந்தது என வுரைக்கப்படுவ தாய், அறத்தையும் பொருளையும்பற்றி நிகழ்வதாம். இப் புறத்திணை யொழுக்கத்தை வெட்சித்திணைமுதல் வாகைத்திணையீறாக வெண்வகைப் படக் கூறுவர்; அவை:—''நிரைகவர்ந் திடுதல் வெட்சி நிரைமீட்டல் கரந்தை யென்ப, வெருவமேற் சேறல் வஞ்சி மீட்டெதி ரூன்றல் காஞ்சி, வருநொச்சி புரிசை காத்தல் வளைத்திட லுழிஞை யாகும், பொருவது தும்பை யென்ப போர்வெல்லல் வாகை யாமே'' எனக் கூறுதலா லறிக.

இவற்றைக் கூறு நூல்களிலே பண்டைக்காலத் தரசர்முதலானோர் போர்முறைகளும் வீரமு நன்குவிளங்கும். இன்னுங் காஞ்சித்திணை, வஞ்சித்திணைக்கு மறுதலைத்திணையான வகை கூறுவதன்றி வீடுபேறு நிமித்தமாகப் பலவிதமான நிலையாமையைச் சான்றோர் கூறுதலுங் காண்க.

புறப்பொருள்வெண்பாமாலையுரையிலே, பாடாண்டிணை, பொதுவியல், கைக்கிளைத்திணை, பெருந்திணையென நான்கும், இவ்வெட்டுடன் கூட்டிப் பன்னிருதிணையாகவுங் கூறுவர். வெட்சிமுதல் தும்பையீறுகவுள்ள வேழும் புறமென்றும், வாகை பாடாண் பொதுவியல் மூன்றும் புறப்புறமென்றும், கைக்கிளை பெருந்திணை யிரண்டும் அகப்புறமென்றுங் கூறுவர். இப் பன்னிருதிணை விவரங்களைப் புறப்பொருள்வெண்பா மாலையுரையிற் காண்க. விரிவஞ்சி யீண்டுக் கூறவில்லை. புறத்திற் கூறிய கைக்கிளை பெருந்திணை யிரண்டுக்கும் பொருள்வேறுண்மையும் அகத்திற்கூறிய கைக்கிளை பெருந்திணை யிரண்டுக்கும் பொருள்வேறுண்மையு முணர்க.

இவ் வகப்பொருள் புறப்பொரு ளிலக்கணங்களைத் தமிழில் எழுத்துமுதலிய ஐவகையிலக்கணங்களுட் பொருளிலக்கணமாகக் கொண்டுவைத்துக் கூறுவர். இவ்விலக்கணம், நந் தெய்வத்தமிழ்நூற்கே யுள்ளதெனவும், ஏனைமொழி நூல்கட் கின்றெனவுங் கண்டுகொள்க. இவ் விருவகை யொழுக்கத்தையும், ஆட்டுவா னுடி முனங் காட்டுதல் போலக் குறிஞ்சிவேந்தராகிய, அறுமுகக்கடவுள் வள்ளிநாயகியை மணந்தின்புற்றும், சூரனாதியருடன் போர்புரிந்து வெற்றியின்புற்று முலகிற்குக் காட்டியருளினா ரெனக.

௪. வீடாவது:—மேலே சுருக்கவுரைத்தாம். ஔவைப்பிராட்டியும், "பரனை நினைந் திம்மூன்றும், விட்டதே பேரின்ப வீடு" என வுரைத்தார். எல்லாப்பற்றும் விடுதலை வீடாதலால், இம்மூன்றும் விட்டதே பேரின்பவீடென்றார். விடுதற்குச் சிறந்த காரணம் பற்றற்றான் பற்றினைப் பற்றுதலென்பார் பரனை நினைந் தென்றார். "யானெனதென்பதிருந்திடுகாறும் ஞானமுறு" தென்பதனால் வீடு காதலிப்போர், எனதென்பதும், யானென்பதுமாகிய புறப்பற் றகப்பற்றுக்களை நீக்கி ஞானநூலோதி ஞானமெய்தி, "உருவன்றி யேநின் றுருவம் புணர்க்கும்,

கருவன்றி யேநின்று தான்கரு வாகு, மருவன்றி யேநின்ற மாயப்பிரானைக், குருவன்றி யாவர்க்குங் கூட வொண்ணுதே" எனத் திருமந்திரத்துக் கூறலால், நல்லாசிரியர் அறிவுறுக்கும்வழிநின்று, துவிதபாவனையைக் கைவிட்டுக் கந்தழியெனக் கூறும் பொருளைத் தானகப் புரியும் பாவனையிலுறைத்துநின்று தன்னுனந்தமாகிய முடிவுகாண்கிலாப்பேரின்பத்தை நுகர்ந்திருத்தலே பேரின்பவீடென்க. கந்தழி என்பதற்குப் பொருள் ஒரு பற்றுக்கோடுமின்றி யருவாகித் தத்துவங்கடந்தபொருளெனக் கூறுவர். கந்து - பற்றுக்கோடு. கந்தழி யென்பதனைத் தொல், பொரு, அஅ-ஞ் சூத்திரங்கொண் டுணர்க. ஈண்டுக் கந்தழியென்பதற்கிப்பொருளேயாம். புறப்பொருள்வெண்பாமாலையுரையிற் கந்தழியென்பதற்குப் பொருள் வேறும். அதனை ஆண்டுக் காண்க.

இங்ஙனங் கூறிய பாவனையே சிவமேதானுகப் பாவிக்கும் பாவனையென்பதும், இரண்டறப் பாவிப்பதாகிய சுத்தாத்துவிதபாவனையுமாமென்பதும் அறிக. இப்பாவனையையு மிதனுலாகு மின்பத்தையும் காஞ்சிப்புராணம் தழுவக்குழைந்த படலத்தில், "உணர்பொருளு முணர்வானு முணர்வு மெனும் பகுப்பொழியா தொழிந்து பாறப், புணர்விழியு நீர்நிழலுந் தீயிரும்பும் புனலுவரும் பரிதி மீனுந், துனையவிரண் டறுகலப்பினெம்முடனுய்ப் பேரின்பந் துய்த்து வாழ்வா, ரினர்விரைத்த மலர்க்கோதா யவர்வடிவே யெமக்கினிய கோயி லாமால்" எனக் கூறுமாறு காண்க.

எல்லாம்வல்ல விறைவன், ஒருங்கே படைக்குங்காலத்தில், "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமையால்' என்றபடி பிறப்பொத் தொற்றுமையாயிருந்த மக்கட்கூட்டத்தினைப் பின்பு செய்தொழில்வேற்றுமைச்சிறப்புநோக்கித் தொல்காப்பிய முதலியவற்றில், அந்தணரென்றும், அரசரென்றும், வணிகரென்றும், வேளாள ரென்றும், மற்றையோ ரென்றும் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றமையால், அவர்களுக்கெல்லா முறுதிப்பொருளாகக் கூறப்பட்டனவிந் நால்வகைப்பொருளுமேயென்றுணர்ந்துய்ய, உணர்வோருணருமாறு, இங்ஙனஞ் சுருங்கவுரைத் தமைகொண் டாராய்ந்து தெளிக.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான,

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

உ

# கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(உ௬௬-ம்பக்கத் தொடர்ச்சி).

43. "இன் தளிர்க் கற் பக நறும் தேன் இடை துளிக்கும்
நிழல் இருக்கை இழந்து போந்து
நின்(று) அளிக்கும் தனிக் குடையின் நிழல் ஒதுங்கிக
குறை யிரந்து நிற்ப நோக்கிக்
குன்(று) அளிக்கும் குல மணித் தோட் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீ கொண்(டு)
அன்(று) அளித்த அர(சு) அன்றோ, புரந்தரன் இன்(று)
ஆள்கின்ற(து) அரச" என்றான்.

இ-ள். "இனிய தளிர்களையுடைய கற்பகதரு இடையிடையே வாசனையுள்ள தேன் துளிதூவும் நிழலில் (உள்ள சிங்காதனத்தில் அரசு வீற்றிருக்கும் பதவியைச் சம்பராசுரன் பறித்துக்கொண்டதனால் அந்த) இருத்தலை இழந்து (அயோத்திக்கு) வந்து, உமது ஏக (வெண்கொற்றக்) குடை நிழலில் ஒதுங்கி (நின்று இந்திரன்) குறை (கூறி) இரந்து நிற்க, (அவனது பரிதாபநிலையைக்) கண்டு, மலைபோலும் தோள்களையுடைய (அந்தச்) சம்பராசுரனை (அவனுடைய) குலத்தோடு (நிர்மூலமாகப் போரிலேகொன்று) நாசமாக்கி (அவன் கைப்பற்றியிருந்த இந்திரபதவியை) நீர் (கைப்பற்றி உம்மதாக்கிக்) கொண்டு (பின்பு இந்திரனுக்கு) அக் காலத்திற் கொடுத்த இராச்சியமன்றோ, அவன் இக்காலத்தில் ஆள்கின்றது!" என்று விசுவாமித்திரர் கூறினார்.

போந்து-வந்து. நின்று அளிக்கும் தனிக்குடை-(உலகத்துக்கு ஆதாரமாக) நின்று காக்கும் ஒப்பற்றகுடை. "பலகுடைநீழலும் தம் குடைக்கீழ்க்காண்" கின்ற சக்கரவர்த்தியின்குடையாதலால், உலகத்துக்கெல்லாம் ஒரு குடையாகவுள்ளதென்பதைக் குறிக்கத் 'தனிக்குடை' யென்றாரெனவுமாம். "நின் தளிக்கும் குடை-உனது குளிர்ந்த குடை" என்னவும் உண்டு. குன்று அளிக்கும்-மலையை ஒத்த. அளித்தல் என்பதற்கு இயல்பாக ஒத்தல் என்ற பொருளில்லையாயினும், அது

எதுகையில் வருதலால் அதற்கு அப்பொருள் கூறப்பட்டது. புறப்பொருள்வெண்பாமாலையில் 'பிணங்கமருள்' என்ற வெண்பாவில் 'சிலையளித்த தோளான் சினவிடலைக் கன்றே-தலையளித்தான் றண்டையுந் தந்து' என வருதல் காண்க. அளித்தல்-ஒத்தல் (ஷை நூல் அரும்பதவுரை) குலம் மணி தோள்-மேலான அழகுடைய தோள்.

முன் பாட்டில், தேவரும் முனிவரும் சரணமடையும் மஹாபுருடருள் ஒருவராகத், தசரதரைத் துதித்த விசுவாமித்திரர், அத்துதிக்கு மேல்துதியாக, இப்பாட்டில், அந்த மஹாபுருஷருள் ஒருவனாகிய இந்திரனே தசரதரைச் சரணடைந்தானென்று, அவருக்கு முன்னைய துதியில் உண்டாயிருந்த மகிழ்ச்சியை மிக அதிகப்படுத்திய சாதுரியம், கம்பர் கவித்திறத்தை விளக்குகின்றது. இவ்வாறு துதிமேல் துதிசெய்தது, அடுத்தபாட்டிற் கூறும் "கரைசெய்ய அரிய(து) ஒரு பேருவகைக் கடல் பெருக"ச் செய்தது காண்க.

44. உரைசெய்யும் அளவில் அவன் முகம் நோக்கி
உள்ளத்தில் ஒருவ ராலும்
கரை செய்ய அரிய(து) ஒரு பே ருவகைக்
கடல் பெருகக் கரங்கள் கூப்பி
"அரசு எய்தி இருந்த பயன் எய்தினன் மற்(று)
இனிச் செய்வ(து) அருளு(க)" என்று
முரசு எய்து கடைத் தலையான் முன் மொழியப்
பின் மொழியும், முனிவன் ஆங்கே.

இ - ள். (அவ்வாறு) சொல்லவே, (தசரதாது) மனத்திலே யாவராலும் கரைகாணமுடியாததோர் பெருமகிழ்ச்சிக்கடல் பெருகாநிற்க, முனிவர்முகத்தைப்பார்த்து அஞ்சலிசெய்து "(யான் இவ்வாறு முனிராசராகியதம்மால் நன்குமதிக்கப்பெற்றதனால், இப்போது தான் அறுபதினாயிரம் வருடம்) அரசாள்பதவியை அடைந்திருந்ததின் பயனை அடைந்தேன். (யான்) இனிமேற் செய்யவேண்டியகாரியத்தைக் கூறியருள்வீராக" என்று சக்கரவர்த்திகூற, முனிவர் கூறுவார்.

முரசு எய்து கடைத்தலை - முரசு (முழங்குதல்) பொருந்திய தலைவாசல். கடை - வாசல். தலைக்கடை கடைத்தலையாக மாறியது.

இக்கவியில், தசரதர்மனமகிழ்ச்சிக்கெல்லையில்லாததுபோல, வாசிப் போர் மனமகிழ்ச்சிக்கும் எல்லையில்லை; சொல்நயம் பொருள்நயம் தொடைநயம், நடைநயம், தொனிநயம் எல்லாம் சிறந்திருத்தலால்.

45. "தரு வனத்துள் யான் இயற்றும் தவ வேள்விக்(கு)
இடையூறுத் தவம் செய் வோர்கள்
வெருவரச் சென்(று) அடை காம வெகுளி என,
நிருதர் இடை விலக்கா வண்ணம்
'செரு முகத்துக் காத்தி' என, நின் சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந் திடுதி" என, உயிர் இரக்கும்
கொடும் கூற்றின் உளையச் சொன்னான்.

இ - ள். "தவஞ்செய்வோர் (தவத்துக்கு இடையூறாக அவர்) கள் அஞ்சும்படி (அவர்களிடம் வந்து)சேரும் காமத்தையும் கோபத்தையும் போல, யான் செய்யும் யாகத்துக்கு இடையூறாக (வந்து தாக்குகின்ற சுவாகு மாரீசன் என்னும்) அரக்கர்கள் இடையே (புகுந்து அந்தயாகத் தைத்) தடுக்காதபடி '(அவர்களைப்) போரில் (எதிர்த்து விலக்கி என் யாகத்தைப்) பாதுகாப்பாயாக', என்று (இராமருக்குக் கட்டளையிட்டு அவ)ரை(எனக்குஉதவியாக)த் தருவீராக"என்று உயிரை(க்கொடு என்று) யாசிக்கும் கொடிய யமன்போலத் தசரதர் மனம்வருந்தும்படி விசுவா மித்திரர் கூறினார்.

தருவனம் - மரங்கள் (அடர்ந்த) வனம். தவவேள்விக்கு - 1. தவ வேள்விகளுக்கு—தவத்துக்கும் வேள்விக்கும்; 2. தவத்தோடுகூடிய வேள் விக்கு. வெருவர-வெருவ - அஞ்சும்படி. நிருதர் - இராக்கதர். செரு முகத்து - போரில். காத்தி - காப்பாய். செம்மல் - புத்திரன். தந் திடுதி - தந்திடுவாய். கூற்றின் - யமனைப்போல. உளைய - மனம்வருந்த.

உயிர் இரக்கும் கொடும் கூற்று என்றது பலவகையில் மிகப் பொருத்தமான உவமானம். தசரதருக்கு இராமர் உயிரென்பது, பின் னவர் காட்டுக்குச் செல்வாராய் நீங்கியபோது முன்னவருக்கு உயிர்நீங் கியதனால் தெளிவாம். இராமர் தசரதர் உயிரெனப் பலசமயங்களிற் கூறப்பட்டிருக்கிறது.

'இரக்கும்' என்றதனுல், நயமாக இராமரைத் துணையாகத் தாவென்று வேண்டியதனையும், 'கொடும் கூற்று' என்றதனுல், தசரதர் அவ்வேண்டுகோளால் அளவிறந்த மனவேதனையடைந்து இராமனுக்குப் பிரதியாகத் தாம் வேள்வியைக் காப்பதாக (இதன் மூன்றும் பாட்டில்) கூறியபோது (நான்காம் கவியில்) விசுவாமித்திரர் இரக்கமின்றிப் பெருங்கோபம்கொண்ட கொடுமையையும், உயிரைவேண்டிய யமன் அதனைக் கொண்டுபோகாதொழியாததுபோல, இராமரைவேண்டிய விசுவாமித்திரர் அவரைக் கொண்டுபோகாதொழியா ரென்பதையும் குறிப்பித்தார்.

46. எண்ணிலா அரும் தவத்தோன் இயம்பிய சொல்,
மருமத்தின் எறி வேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும் புழைபில் கனல் நுழைந்தால்
எனச், செவியில் புகுத லோடும்,
உண்ணிலா விய துயரம் பிடித்(து) உந்த
ஆருயிர் நின்(று) ஊசல் ஆடக்,
கண்ணிலான் பெற்(று) இழந்தான் என உழந்தான்
கடுந் துயரம் கால வேலான்.

இ-ள். அவர் கூறியவார்த்தை, (தசரதருக்கு) மார்பிலே வேல் பாய்ந்த புண்ணிலே உண்டாகிய பெரும்புரையினுள்ளே நெருப்புநுழைந்தாற்போலக் காதிலே புகுந்தவுடனே, (அவர்) மனத்தில் உண்டாகிய துன்பம் (அவர் உயிரைப்) பிடித்து (உடலினின்று வெளியே) தள்ள, உயிர், (தான் நெடுங்காலம் வாழ்ந்த உடலாதலால், அதனைப் பிரியமாட்டாமல் திரும்ப உள்ளேபுகத், துன்பம் மறுபடியும் வெளியேதள்ள, உயிர் மீண்டும் உள்ளே புக, இவ்வாறாக, உயிர் போவதும் வருவதுமாகி) ஊஞ்சல்போல ஆட, (அவர் நெடுங்காலம் பிள்ளையில்லாதிருந்து வருந்தி அருமையாகப் பெற்ற பிள்ளையை இழந்துவிட்டதாக நினைந்து,) ஒரு பிறவிக்குருடன் கண்பெற்று (ப் பின்பு) இழந்தான் (ஆனல் அவன்) போலக் கடுந்துன்பத்தை அடைந்தார்.

எண்ணிலா—1. எண் இல்லா - சங்கியை இல்லாத - அளவில்லாத; 2. எண்ணுதல் இல்லாத - (விசுவாமித்திரர் தம் வார்த்தையால் தசரதருக்கு எவ்வளவு துன்பமுண்டாமென்று) எண்ணிப்பாராத; "அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு" என்பதில் 'அஞ்சாமல்' என்பது 'அஞ்சா'

என வந்ததுபோல, 'இலாமல்' என்பது 'இலா'என வந்ததாகக்கொண்டு 'எண் இலா' என்பதற்கு 'யோசனையில்லாமல்' எனவும் பொருள்கொள்ள லாம்; 3. எண்(—எளிமை) இலா - வலிய. 4. எண் (—மனம்) நி(ல்)லா (விசுவாமித்திராது தவத்தின் பெருமையை நினைவாராது) மனம் (இடம் போதாமையால் அதில் அடங்கி) நில்லாத. "எண் - மனம்" சங்க அக ராதி. "எண்ணிலா" என்பதற்கு இந்த நான்காம்பொருள்கொண்டால் இப்பாட்டுத் திரிபு என்னும் கவியாம். எண்(—மனத்தில்) நிலாவு(விளங் கிய) அருந்தவத்தோனென்றும் பதம்பிரித்துப் பொருள்கொள்ளலுமாம். புழை - துவாரம். உள்(-மனத்தில்) நிலாவியதுயரம் (-துன்பம்) பிடித்து உந்த (-தள்ள) ஆருயிர் (-அருமையான உயிர்) நின்று (தள்ளப்பட்டும் வெளியேபோகாது உடலுள்நின்று) ஊசல் ஆட (-ஊஞ்சலைப்போல ஆட) ஊஞ்சலைப் பிடித்துத்தள்ளத்தள்ள, அது திரும்பத்திரும்பத் தான் இருந்த இடத்துக்கு வருவதுபோலத், துன்பம் வெளியே பிடித்துத் தள்ளத்தள்ள, உயிர் தன்நிலையமாகிய உடலுக்கு மீண்டும்மீண்டும் திரும் பியதாகக் கவி துக்கவருணனைசெய்தது மிக்க பொருத்தமானது. அவர் இப்படிப்பட்ட மற்றொரு சந்தர்ப்பத்தில் "ஆவி வருவதுபோவ தாகி" என்று கூறுவர்; வேறோரிடத்தில் "உண்டிலை யென்னநின்றஉயிர்" என்பர். 'காலவேலான் கடுந்துயரம் உழந்தான்' என மாற்றிக் காலனை ஒத்த வேலாயுதத்தையுடைய தசரதர் கொடிய துன்பத்தை வருந்தி யநுபவித்தார் என்று பொருள்கொள்க.

அறிஞர்கள், "தவத்தோன் இயம்பிய சொல் மருமத்தின் எறிவேல் பாய்ந்த புண்ணில் ஆம் பெரும் புழையிற் கனல்நுழைந்தாலெனச் செவியிற் புகுதல்" என்பதனில் உள்ள உவமான உவமேயப் பொருத் தத்தைநோக்கி மிக்க மகிழ்ச்சி அடைவர். அடைந்தவர் அதனினும் அதிக இன்பம் பயக்கும் "உள்நிலாவிய துயரம் பிடித்துந்த ஆருயிர் நின்றூசலாட" என்பதனில் உள்ள அரிய கருத்தின்சுவையை ருசித்து நுகர்ந்து ஆனந்தித்தபோது அதுபோலச் சுவையுடைய கவிக்கருத் திராதென்று இயல்பாகக் கருதுவர். ஆயினும், அதனை அடுத்து வரு கின்ற அதற்குப் பிந்தாத சிறப்புடைய "கண் இலான் பெற்றிழந்தான் என உழந்தான் கடுந்துயரம் காலவேலான்" என்பதனால் அவர்கள் அடையும் ஆநந்தத்துக்கு எல்லை இல்லை.

இவ்வாருக இப்பாட்டு, துவக்கமுதல் இறுதிவரையும், மேன்மேல் மகிழ்ச்சி விளைக்கும் மூன்று சிறந்த கருத்துக்கள் அடங்கியுள்ளது. இப்படலத்தில் இதற்குமுந்திய இனிமைமிகுந்த கவிகள் மற்றைய அங்கங்களில் அணியும் ஆபரணங்களாக, இது சிரசில் அணியும் மகுடம் போல விளங்குகின்றது.

47. தொடை ஊற்றின் தேன் துளிக்கும் நறும் தாரான்
ஒரு வண்ணம் துயரம் நீங்கிப்
படை ஊற்றம் இலன், சிறியன்; அவர் பெரியோர்:
பணி இதுவேல், பனி நீர்க் கங்கை
புடை ஊற்றும் சடையானும் நான்முகனும்
புரந்தரனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக்(கு) இடையூருய் யான் காப்பன்:
பெரு வேள்விக்(கு) எழுக வென்ருன்.

இ - ள். (பின்பு அவர் சமாளித்து) ஒருவாறு துன்பம் நீங்கி "இராமன் படைகளையாளும் பலமில்லாதவன்; சிறியவன்; அவரோ [-அரக்கரோ) பெரியவர்: (ஆதலால் உமது வேள்வியை) நான் காப்பேன். வேள்விசெய்தற்குப் புறப்படுக" என்ருர்.

தொடை ஊற்றின் தேன் துளிக்கும் நறும் தார்—தொடுத்தலாக ஊற்றைப்போலத் தேன் சொட்டும் வாசனையுடைய மாலே.

ஊற்றம்—வலி. பணி—கட்டளை. பனிநீர்க்கங்கை—குளிர்ச்சியுடைய நீரையுடைய கங்கையை. புடை ஊற்றும்-(ஒரு) பக்கத்தில் வடியச் செய்யும்—பாயவிடும். புரந்தரன் - இந்திரன்.

48. என்றனன் என் றலும் முனிவோ(டு) எழுந்தனன் மண்
படைத்த முனி! இறுதிக் காலம்
அன்(று) என, ஆம் என, இமையோர் அயிர்த்தனர் மேல்
வெயில் கரந்த(து!) அங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தன மீ நிவந்த கொழும்
கடைப் புருவம் நெற்றி மூற்றச்
சென்றன வந் தது நகையும் சிவந்தன கண்
இருண்டன போய்த் திசைகள் எல்லாம்.

இ - ள். என்று (இவ்வாறு தசரதர்) கூறினர். • கூறின உடனே, ('பிரமா முதலிய சகல ஜீவராசிகளோடு உலகத்தைச் சிருட்டிப்பேன்' என்று சிருட்டிக்கத்தொடங்கி ஒருபாகம்) உலகத்தைச் சிருட்டித்து விட்ட(பெருவல்லபம்உள்ள) விசுவாமித்திரமுனிவர் கோபத்தோடு (புறப் பட) எழுந்தார்! (அவருடைய கோபாக்கினி எங்கும் பரவ, இந்தப் பிர ளய காலாக்கினி இப்போது எப்படிவந்தது, யுகமுடிவுகாலம் வர இன் னும் நெடுங்காலம் உண்டே, ஆதலால் இப்போது உலகமுடிவுகாலம் போலத் தோன்றினும், உண்மையில் உலக) முடிவுகாலம் அன்று என்றும், (இவ் அக்கினி உலகத்தை முடித்தேவிடுமாதலால், இது முடிவு காலமே) ஆம்என்றும் (எது நிச்சயமென்று துணியக் கூடவில்லை யே என்றும்) தேவர்கள் சந்தேகிப்பாராயினர்! (அந்தக் கோபாக் கினியின் புகையினுல்) சூரியனும் மறைந்தது! (விண்ணுலகத்தும் மண்ணுலகத்தும் உள்ள நிலைபெயர்ந்து சரிக்கும் இயல்புடைய சரப்பொருள்களோடு நிலைபெயராத)அசரப்பொருள்களும்(நிலைபெயர்ந்து) அங்கும் இங்குமாக அலைவனவாயின! (கோபத்தால்) மேலேறிய (உரோம அடர்ச்சி) வளமுடைய (அவருடைய) புருவக்கடைகள் நெற்றிமுழுதும் (வியாபிக்கும்படி மேல்நோக்கிச்) செல்வனவாயின! (கோபச்) சிரிப்பும் உண்டாயிற்று). கண்களும் (அந்தக்கோபத்தாற்) சிவந்தன! (அப்படிப் பட்ட கோபமாகிய நெருப்பினது புகையினுல், மேலேகூறியவாறு, சூரி யன் மறைந்ததேயன்றி) எல்லாத் திக்குகளும் இருண்டுபோயின!

என்றலும் - என்றவுடனே. முனிவு - கோபம். இறுதி - முடிவு. வெயில் - 1. வெயில்; 2. சூரியன். கரந்தது - மறைந்தது. மீ - மேல். நிவந்த - உயர்ந்த - ஏறின. இருண்டன போய் - இருண்டுபோயின. 'திசைகளெல்லாம் போய் இருண்டன' என மாற்றித் திசைகளெல்லாம் (விளங்குதல்) போய் (க் கண்ணுக்குத் தெரியாதனவாக) இருளடைந்தன என்றும் பொருள்கொள்ளலாம்.

இப்பாட்டில் விசுவாமித்திரரது கோபம் அதி காம்பீரியமாய் மிக்க அதிசயம்விளைப்பதாய்ப் பாரித்து வருணிக்கப்பட்டிருக்கிறது.

விசுவாமித்திரரைக்குறிக்க, எத்தனையோ சொற்றொடர்கள் இருக்க, இங்கே 'மண்படைத்த முனி' என்றுகூறியது,—அவர் கோபம், உலக

முடிவுவந்துவிட்டதோ என்று தேவர்கள்சந்தேகிக்கவும் சூரியன்மறைய வும் திசைகள் இருளவும் செய்ததென்பது அசம்பாவிதமன்றெனக் கொள்ளும்படி பூர்வபீடிகையாகக் கூறியதென உய்த்துணரவைத்தார்.

49. கறுத்த மா முனி கருத்தை உன்னி, "நீ
பொறுத்தி" என்(று) அவற் புகழ்ந்து, "நின்மகற்(கு)
உறுத்தல் ஆகலா உறுதி எய்தும் நாள்
மறுத்தி யோ?" என வசிட்டன் கூறினன்.

இ - ள். வசிட்டர், (இவ்வாறு) கோபித்த விசுவாமித்திரர் (இராம ருக்கு மிக்க நன்மைசெய்யக் கருதியிருக்கும்) கருத்தை ஆராய்ந்தறிந்து கொண்டு, ("அளவற்ற தவவலியையுடைய நீர் கோபித்தால், யார்தாம் தாங்கவல்லார்" என்று) அவருக்குப் புகழ்மொழிகூறிச் (சாந்தப்படுத்தி விட்டுத் தசரதரைநோக்கி) "உமது மகனுக்கு (விசுவாமித்திரரன்றி வேறெவராலும்) அடைவிக்கமுடியாத நன்மைகள் அடையுங்காலத்தில் (அவைகள் அடையவொட்டாமல்) தடுக்கிறீரோ?" என்று கூறினர்.

கறுத்த - கோபித்த. உன்னி - ஆராய்ந்தறிந்து. "உன்னினேன் உனதுள்ளத்தின் உள்ளத்தை உரவோய்" என அநுமார் சுக்கிரீவனை நோக்கிக் கூறியதிலும், உன்னுதல் ஆராய்ந்தறிதல் எனப் பொருள்படல் காண்க. பொறுத்தி - பொறுப்பாய். அவற்புகழ்ந்து - அவனைப்புகழ்ந்து 'அவற்புகன்று' என்ற பாடத்துக்கு 'அவனுக்குச் சொல்லி' என்பது பொருள். உறுத்தலாகலா - உறுவிக்கலாகலா -- அடைவிக்கமுடியாத. உறுதி - நன்மை. (சங்க அகராதி); நல்லது (சிந்தா. அரும்பத அக ராதி). மறுத்தியோ - மறுப்பாயோ - தடுப்பாயோ.

50. "பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் போய்
மொய் கொள் வேலை வாய் முடுகும் ஆறு போல்,
ஐய, நின் மகற்(கு) அள(வு) இல் விஞ்சை வந்(து)
எய்து காலம் இன்(று) எதிர்ந்த(து)" என்னவே,

51. குருவின் வாசகம் கொண்டு, கொற்றவன்
"திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்(று)" என,
"'வருக' என்றனன்" என்ற லோடும் வந்(து)
அருகு சார்ந்தனன் அறிவின் உம்பரான்.

இ - ள். "மழையினால் பெருகும் வெள்ளங்கள் கடலினிடத்து விரைந்துசென்றடைதல்போல, உம்முடைய மகனுக்கு அளவற்ற வித்தைகள் வந்து சேருங்காலம் இன்று நேர்ந்தது" என்று வசிட்டர் கூறத், தசரதர் அவர் வார்த்தையை ஏற்று உடம்பட்டு (த் தூதர்களை நோக்கி " நீங்கள்) போய் இராமனை அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று ஏவ, (அவ்வாறே அவர்கள்போய்ச் "சக்கரவர்த்தி உம்மை) 'வருக' என்றார்" என்றவுடனே அவர்வந்து (தசரதர்) அருகே அடைந்தார்.

மொய் - கூட்டம் (பிங்கலநிகண்டு). மொய்கொள்வேலை - (மூந்தி வந்த வெள்ளக்) கூட்டத்தை (த் தனக்குள்ளாக்கி)க்கொண்டிருக்கின்ற கடல். வெள்ளங்கள் வித்தைகளுக்கும் கடல் இராமருக்கும் உவமானமாதலால், மேற்கூறிய பொருளுக்கேற்ப உவமேயத்தில் முன்னமே வசிட்டர் கற்பித்துத்தந்த வித்தைக்கூட்டங்களைத் தம்முடையனவாக்கிக் கொண்டிருக்கின்ற இராமர் என்று பொருள் வருவித்துக்கொள்க. முடுகும் ஆறு - விரைந்து அடையும் விதம். விஞ்சை - வித்தை. கொண்டு—ஏற்றுக்கொண்டு (உடம்பட்டு). திருவின்கேள்வன்—இலக்குமிநாயகன்—விட்டுணுவைப்போன்றவன்—இராமன். கொணர்மின் சென்று என - (தூதரைநோக்கி நீங்கள்) சென்று கொணர்மின் (-கொண்டுவாருங்கள்) என. வருக என்றனன் - (உன்பிதா உன்னைத் தன்பால்) வருவாயாக என்றான். அருகு —(தசரதன்) அருகு. அறிவின் உம்பரான் - அறிவின் மேலோன் - அறிவுக்குமேற்பட்டவன் - அறிவுக்கெட்டாதவன் - கடவுள் (அவதாரமானவன்—) இராமன். 'திருவின் கேள்வன்' தசரதர் கூற்று. 'அறிவின் உம்பரான்' கம்பர்கூற்று. தசரதருக்கு இராமர் விட்டுணுவின் அவதாரமென்பது தெரியாதாதலால், 'திருவின் கேள்வன்' என்பதற்கு விட்டுணுவின் அவதாரமான இராமன் என்று பொருள் கூறவில்லை.

'கொணர்மின்' என்பதற்குமுன் 'தூதரைநோக்கி' என்று சொல்லற்பாலது, சொல்லாதிருக்கவும் விளங்குகின்றது. அத்தூதர் இராமனை அடைந்து அவனைநோக்கி, 'உன் தந்தை உன்னைத் தன்பால்வருக என்றனன்' எனக் கூறற்பாலதை 'வருக என்றனன்' எனச் சுருக்கிக் கூறியதிற் பொருள்விளக்கம் அமையாதிருக்கவில்லை. இவ்வாறாக, இப்

பாட்டு, 'சுருங்கச் சொல்லல்' 'விளங்கவைத்தல்' என்ற ஒன்றுக்கொன்று இயல்பிலே முரணுன இரண்டுவனப்புக்கள் ஒருங்கே அமைய இயற்றப் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

52. வந்த நம்பியைத் தம்பி தன்னெடு
முந்தை நால் மறை முனிக்குக் காட்டி, நல்
தந்தை நீ, தனித் தாயும் நீ இவர்க்(கு)
எந்தை! தந்தனன்: இயைந்த செய்(க) என்ருன்.

இ - ள். (தம் அருகு) வந்த இராமரைத் (தசரதர்,) இலக்குமண ரோடு விசுவாமித்திரருக்குச் சுட்டிக்காட்டி "இவர்களுக்கு நீரே தாயும் தந்தையும்: (தேவரீர் கேட்டபடியே) இவர்களை உமக்கு(அடைக்கலமாக)க் கொடுத்தேன். (இவர்களைக்கொண்டு உமக்கு) வேண்டிய காரியங்க ளைச் செய்துகொள்வீராக" என்ருர்.

நம்பி - ஆடவரிற் சிறந்தோன் - இராமன். தம்பி - இலக்குமணன்' முந்தை - பழமை. காட்டி - சுட்டிக்காட்டி. எந்தை! - எமது தந் தையே. இயைந்த - இயைந்தவை - பொருந்தியவை - பொருத்தமான காரியங்கள்.

[அவ்வாறு கொடுத்த குமாரரை ஒப்புக்கொண்டு முன்கொண்ட கோபத்தை நீக்கித் தசரதரை வாழ்த்தி, இனி நாம் தொடங்கிய வேள்வி யை முடிக்கச் செல்வோமென்று விசுவாமித்திரர் புறப்பட்டார். இராம ரும் இலக்குமணரும் தசரதருயிர் அவரைப் பிரிந்துசென்ருற்போலவும் விசுவாமித்திரரை நீங்காமல் அவர் நிழல்சென்ருற்போலவும் சென்று அயோத்தியைக் கடந்து சரயுநதியைத் தாண்டி அத்தமனசமயத்தில் ஒரு சோலையை அடைந்தார்கள். "அது யாது" என்று இராமர் விசுவா மித்திரரைக் கேட்டார்].

---

## தாடகைவதைப்படலம்.

"சிவன் மன்மதனை யெரித்தகாலத்தில் அவன் அங்கம் (-எலும்பு) விழுந்ததனுல், இந்த இடமெல்லாம் அங்கநாடு எனப் பெயர்பெற்றது. இந்தச்சோலை காமாச்சிரமம் என வழங்கலானது" என்று விசுவாமித்தி ரர்கூறிப் பின்னும் கூறுவார்.]

53. பற்(று) அவா வேரொடும் பசை அறப், பிறவி போய்
முற்ற, வால் உணர்வு மேல் முடுகினர் அறிவு சென்(று)
உற்ற வா னவன் இருந்(து) யோகு செய் தனன் எனில்,
சொற்ற ஆம் அளவதோ! மற்(று) இதன் தூய்மையே.

இ - ள், (யான் எனது என்னும் இருவகைப்) பற்றும் ஆசையும் வேரோடு (முழுதும்) ஈரப்பசையற்றுக் கெட்டழியவும், பிறவி அற்றுப் போயொழியவும் மெய்யுணர்வு (பரம்பொருளை அறியும்படி) மேல்(நோக்கி) விரைந்து சென்றார் (ஆகிய ஞானி)களின் அறிவு (முடிவாகச்) சென்று அடையும் (திருவடிகளையுடைய) பரமசிவன் இவ் ஆச்சிரமத்திலிருந்து யோகஞ்செய்தாரென்றால், இதன் தூயதன்மை சொல்லுக்கடங்கும் தரத்தினதாமோ!

பற்று - முன்னமே அடைந்திருக்கிற பொருள்களின்மேலுள்ள அபிமானம். அவா - அடையாத பொருள்களை அடைய விரும்பும் இச்சை. 'பற்று அவா' என்பவைகளைப் 'பற்று ஆர்வம்' என்பர் சிந்தாமணி யாசிரியர். "பற்று - உள்ளதன்மேற்று. ஆர்வம் - பெறக்கடவதன் மேலது" (சிந்தாமணி அரும்பத அகராதி). பற்று அவா வேரொடும் பசை அற - பற்றும் அவாவும் என்னும் மரங்கள், இலை வளார் கொம்பு கிளை பணை தூரேயன்றி வேரும் ஈரப்பசையற்றொழிய. வால் - அறிவு - மெய்யுணர்வு. வானவன் - தேவன் - மஹாதேவன் - சிவன். சொற்ற (- சொன்ன) ஆம் அளவதோ - (இதுவரை) சொல்லப்பட்டனவாம் அளவினதோ - (இவ்வாச்சிரமத்தின் தூயதன்மை இதுவரை தன்னைப்பற்றிப் பலராலும் வியந்து) சொல்லப்பட்டன ஆகிய அளவுடையதோ (அன்று; அவ்வளவுக்கு மேற்பட்டது).

அறியாமை அல்லது மயக்கஅறிவு காரணமாக உண்டாகும் பற்றும் அவாவும் ஒழியப் பிறப்பொழியும், பிறப்பொழிய வீடு (—இறைவன் திருவடியடைதல்) சித்திக்கும் என்ற ஞான விஷயம் இப்பாட்டிற் கூறப்பட்டது. இதனைச் சுருக்கமாக "அற்றது பற்றெனில், உற்றது வீடு" என்னும் ஞானவாக்கியத்திற் காணலாம்.

[அன்று அவர்கள் அங்கே தங்கி மறுநாள் உதயம் ஒரு பாலை நிலத்தை அடைந்தார்கள்].

54. பரிதி வா னவன் நிலம் பசை அறப் பருகுவான்
விருது மேற் கொண்(டு) உலாம் வேனிலே அன்றி வே(று)
இருது ஒன்(று) இன்மையால், எரி சுடர்க் கடவுளும்
கருதின் வேம் உள்ளமும்! காணின் வேம் நயனமும்!

இ - ள். (அந்தப் பாலைநிலம்) அதன் ஈரப்பசை முற்றும் அற்றுப்போம்படி உறிஞ்சிவிடச் சூரியன் வெற்றிக்கொடியை மேல் உயர்த்துப் பிடித்துக்கொண்டு சஞ்சரியாநின்ற கோடைப்பருவமொன்றேயன்றி வேறெந்தப்பருவமும் (அந்தப் பாலைநிலத்தில் எக்காலமும் வருதல்) இல்லாததனால் (அந்த நிலத்தை) அக்கினிதேவனே சிந்திப்பானானால் அவன் சிந்தை வெந்துவிடும்! காண்பானாயின், கண்ணும் வெந்துவிடும்!

பரிதி (- சூரியன்) வானவன் (-தேவன்) -சூரிய (னாகிய) தேவன். பருகுவான் - பருகும்படி, குடிக்கும்படி. விருது - வெற்றி, வெற்றிச் சின்னம் - வெற்றிக்கொடி. மேல் கொண்டு - மேலாகக்கொண்டு. உலாம்- உலாவும், சஞ்சரிக்கும். வேனில் - கோடை. இருது - பருவம். எரி . சுடர்க்கடவுள் - சுவாலிக்கும் அக்கினிதேவன். கருதின் - கருதினால். வேம் - வேகும்.

55. படியின்மேல் வெம்மையைப் பகரினும், பகரும் நா
முடிய வேம்! மூடிய மூ(டு) இருளும் வான் முகடும் வேம்!
விடியுமேல் வெயிலும் வேம்! மழையும் வேம்! மின்னினோ(டு)
இடியும் வேம்! என்னில் வே(று) யாவை வே வாதவே!

இ - ள். (அந்தப் பாலை) நிலத்தில் உள்ள வெப்பத்தை(ப்பற்றி)ச் சொன்னாலும் சொல்லும் நாக்கு முழுதும் (அடியோடு) வெந்துபோம்! (அந்த வெப்பத்தால், அந்த நிலத்தை) முழுதும் மூடிய இருளும் ஆகாய முகடும் வெந்துவிடும்! விடியுமானால் (அந்நிலத்தின் மேல் எறிக்கும்) வெயிலும் வெந்துவிடும்! (அந்நிலத்துக்கு மேலாகவந்தால்) மேகமும் வேகும்! அந்நிலத்தில் (மின்னும்) மின்னும் (இடிக்கும்) இடியும் வெந்து விடும்! என்றால், வெந்துவிடாதபொருள்கள்தாம் யாவை இருக்கின்றன.

படி - நிலம் - அந்தப்பாலைநிலம். முடிய வேம் - முழுதும்வேகும். மூடிய மூடு - (அந்தநிலம்) முழுதும் மூடிய. வேவாத - வேகாதவை,

56. விஞ்சு வான் மழையின் மேல் அம்பும் வே லும் படச்
செஞ்செவே செரு முகத்(து) அன்றியே, திறன் இலா
வஞ்சர் தீ வினையினல், மானம் ஆம் மணி இழந்(து)
அஞ்சினர் நெஞ்சு போல் என்றும் ஆ ரு (து!) அரோ.

இ - ள். மிகுந்த மழைத்தாரைகளினும் அதிகமாக அம்புகளும் வேல்களும் தாக்க, மிக நேர்மையாக (க் கிரமமான) யுத்தத்திலே (இயல் பாகத் தோல்வி அடைதல்) அல்லாமல், (போர்செய்யும்) வல்லமையில் லாத வஞ்சகர்களது (யுத்தமுறைக்கு விரோதமாக, எதிர்நில்லாமல், பின்புறத்து நின்று காயப்படுத்தல்போன்ற கபடமான) கொடிய செய் கையால் மானமாகிய மணியை யிழந்து (அநியாயமாகவும் அவமானமாக வும்) தோல்வியடைந்தார் (ஆகிய வீரர்) களுடைய மனம் (கொதிப்பு) ஆறுதது போல, என்றும் கொதிப்பாறுதது (அந்தப் பாலைவனம்).

வான் - மேகம் - மேகத்தின். மழையின்மேல் - மழைத்தாரையி னும் அதிகமாக. மான மா மணி யெனக்கொண்டால், மான மென்னும் பெரிய இரத்தினம் என்பது பொருளாம். "அஞ்சல் - தோல்வி (பிங் கலம்)".

57. தா வரும் இரு வினை செற்றுத், தள் அரும்
மூ வகைப் பகை அரண் கடந்து, முத்தியில்
போவது புரிபவர் மனமும் பொன் விலைப்
பாவையர் மனமும் போற் பசையும் அற்றதே.

இ - ள். (நல்வினை தீவினையென்னும்) இருவினைகளாகிய காடுக ளாம் கோட்டைப்புறத்து அரண்களையும் தொலைத்து, (காமம் வெகுளி மயக்கமென்னும்) மூன்றுவகைப் பகைக்கோட்டைகளைத் தாண்டி, முத்தி (நகரத்தில் ஜெயசாலிகளாய்ச்) சேர்தற்கு விரும்புவோரது மனத்தையும் வேசையரது மனத்தையும் போல ஈரப்பற்று இல்லாதது (அந்தப் பாலை வனம்.)

தாவரும் - துன்பம்வரும் - துன்பம் வருதற்குக் காரணமான. இருவினை - நல்வினை தீவினை. நல்வினையும் பிறவிக்குக் காரணமாதலால் துன்பம்தரும் வினையென்றார். இருவினைக்குப் பெரியவினையென்றும் பொருள் கொள்ளலாம். செறுதல் - அழித்தல். செற்று - அழித்து.

தள் அரும் - நீக்குதற்கரிய. மூவகை-மூன்றுவகை. அரண்-கோட்டை. புரிபவர் - விரும்புபவர். பொன்விலைப் பாவையர் - (போகத்துக்குப்) பொன்னை விலையாகக் கொள்ளும் பெண்கள் - வேசியர். பசை - 1. பற்று (செய்யுள்வழக்கு, சிந்தாமணி அரும்பதவுரை); 2. ஈரம் (உலகவழக்கு). முத்தியை விரும்புவோர்மனம் ஈசன் திருவடிப் பற்றன்றி வேறு பற்றில்லாதது; வேசியர்மனம் பொருட்பற்றன்றி வேறு பற்றில்லாதது; பாலைவனம் கொதிப்புப்பற்றன்றி வேறு பற்றில்லாதது - ஈரப்பற்றில்லாதது.

[இராமர், "தசரதர்நாட்டில் ஒருபகுதி இவ்வாறு அழிந்ததற்குக் காரணம் யாது?" என, விசுவாமித்திரர் கூறுவார்.]

58. பெருவரை இரண்டொடும் பிறந்த நஞ்சொடும்
உரும் உறழ் முழக்கொடும் ஊழித் தீயொடும்
இரு பிறை செறிந்(து) எழு கடல் உண் டாம் எனின்,
வெருவரு தோற்றத்தள் மேனி மானுமே.

59. சூடக அர(வு) உறழ் சூலக் கையினள்,
கா(டு) உறை வாழ்க்கையள், கண்ணிற் காண்பரேல்,
ஆடவர் பெண்மையை அவாவு தோளினாய்!
தாடகை என்ப(து) அச் சழக்கி நாமமே.

இ-ள். புருடர்கள் (எப்படிப்பட்டதோள்களைக்) கண்களாற்காண்பாரானால் அவைகளின் அழகில் ஈடுபட்டு அவைகளைத்தழுவப் பெண்ணாகப்பிறந்தோமில்லையே யென்று) பெண்தன்மை (அடைய) விரும்பு(வார்களோ, அப்படிப்பட்ட) தோள்களையுடையவரே! யுகமுடிவுகாலத்துத் தீயும் (இரண்டு) ஆலகாலவிடமும் இரண்டு பிறையும் இரண்டு மலையும் இடிமுழக்கமும் பொருந்தித்தோன்றும் (பெருங் கருங்) கடல் (ஒன்று)உண்டாமானால், அந்தக்கடல், (பெருநெருப்புச் சுவாலித் தெரிதல்போன்ற செம்பட்டைத் தலைமயிரும் இரண்டு ஆலகாலவிடங்கள் போன்ற பெரிய கரிய கொடிய கண்களும் இரண்டு பிறைகள்போன்ற கோரப்பற்களும் இடிமுழக்கம்போன்ற ஆரவாரமும் ஆகிய இவைகளோடு பார்த்தோர்) பயப்படும்படியான தோற்றமுடைய (இந்தப்பிரதேசத்தைப் பாழ்படுத்திய) வள் தேகத்தை ஒக்கும். அவள் பெயர் தாடகை.

பிறந்த நஞ்சு - கடலில் (தேவர்கள் அமுதத்துக்காகக் கடைந்த காலத்தில்) உண்டாகிய ஆலகாலவிடம். உரும் - இடி. உறழ்தல்-உவமை யாதல். செறிதல் - இயைதல் - பொருந்தல். எழுதல் - தோன்றுதல். வெருவரல் — பயப்படல். வெருவருதோற்றத்தள் - பயப்படுதற்குக் காரணமான தோற்றத்தையுடையவள். மானும் - ஒக்கும்.

சூடக அரவு உறழ் சூலம் - (கையில் அணிந்த) சூடகமாகிய (படம்விரித்த) பாம்புபோலும் (ஒடுங்கி நீண்ட உடலும் பரந்த தலையும் உடைய) சூலாயுதம். சூடகம் - கைவளை. 'சூடக அரவு உறழ் கை' எனக் கூட்டிச் சூடகமாக அணிந்திருக்கிற பாம்புபோன்ற கை யென்றும் பொருள் கூறலாம். பின்வரும் காஞ்சிப்புராணப் பாட்டிலும் பாம்பைக் கைக்கு உவமானமாக வருணித்திருத்தல் காண்க.

முருகு கொப் புளிக்கும் கொன்றை நறுந் தொடை முடித்த வேணி
ஒருவர் வாள் முகத்துக் கண்ணுய் உறையினும், விடேங்கள் என்(று) அவ்
இரு திறத்(து) அரவும் கூடி ஏல்வை பார்த்(து) உண்ட(து) ஒக்கும்,
விரி மலர்க் காங்கள் தம்மால் விழித் துணை புதைத்த தோற்றம்.

காடு உறை - வனங்களில் வாழ்கின்ற. சழக்கு-நீதிக்குமாறுனது; வழக்கிற்குமாறுனது என்பது கருத்து (உ - ம்).

'இழக்கின்றேன் மைந்தனையென் றெல்லீருஞ் சொல்லியவிச்
சழக்கின்று நானிசைந்தாற் றருமந்தான் சலியாதோ'
பெரிய புரா. திருவாரூர்-௩ரு. (சங்க அகராதி)

60. "உளப் பரும் பிணிப்பு உறு உலோபம் ஒன்றுமே
அளப்பு அரும் குணங்களை அழிக்கும் ஆறு போற்,
கிளப்பு அரும் கொடுமைய அரக்கி, கே(டு)இலா
வளப் பரும் மருத வைப்(பு) அழித்து மாற்றினள்."

இ - ள். "உலோபகுணம் ஒன்றே (எனினும் அது ஒருவனது) உள்ளத்தின் பெரியபந்தமாக உற்று, (அவனுடைய) அளவற்றநற்குணங் களை அழித்துவிடுதல்போல, சொல்லமுடியாத கொடுமைகளையுடைய (இந்த) இராட்சசி, (முன்) குறைவில்லாத வளப்பத்தையுடைய விசால மான மருதநிலமாயிருந்த (இந்த இடத்)தை (அடைந்து இதன் வளங்க ளெல்லாவற்றையும்) அழித்து (ப் பாலைநிலமாக) மாற்றினள்."

பரும் - பருமையான - பெரிய. பிணிப்பு - கட்டு. உறு - உற்று. அளப்பு அரும் - அளத்தல் அரிய - அளவற்ற. ஆறு - விதம். கிளப்பு

அரும் - சொல்லுதல் அரிய - சொல்லமுடியாத. கேடு - குறைவு. (உ-ம்) "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை" (நாலடி-கசச) சங்க அகராதி. வளம் (உடைய) பரும் (-பெரிய-விசாலமான) மருதவைப்பு (-மருதநிலம்). வைப்பு - இடம், இங்கே நிலத்தைக் குறித்தது.

ஒருவனது எல்லா நற்குணங்களும் நிறைந்திருந்த மனத்தில் உலோபகுணம் ஒன்று தோன்றுமானால், அது அந்த நற்குணங்கள் அனைத்தையும் நாசமாக்கி அம் மனத்தைப் பாழ்மனமாக்குதல்போல, சகலவளங்களும் நிரம்பியிருந்த மருதநிலத்தில் தாடகை ஒருத்தி தோன்றி எல்லா வளங்களையும் அழித்து அந்தநிலத்தைப் பாழ்நிலமாக்கினாள் என்பது கருத்து.

61. அங்(கு) இறைவன் அப் பரிசு(உ) ரைப்ப அது கேளாக்,
கொங்(கு) உறை ந றைக் குல ம லர்ச் செனி கு லுக்கா,
"எங்(கு) உறைவ (து) இத்தொழில் இ யற்றுபவள்?' என்றான்,
சங்(கு) உறை க ரத்(து) ஒரு த னிச் சிலை த ரித்தான்.

இ - ள். என்று இவ்வாறாகத் தவராசராகிய விசுவாமித்திரர்கூற, (திருமாலாக இருந்தபோது) சங்குதங்கிய இடக்கையிலே (தசரத குமாரராய்) வில்லைத்தாங்கிய (இராக) வர் கேட்டு, வாசனைதங்கிய மலர்மாலையணிந்த (முடித்) தலையை (அப்படியா! என்று) அசைத்து "இப்படிப்பட்ட (கொடிய) தொழில்செய்பவள் தங்குவது எங்கு?" என்றுகேட்டார்.

இறைவன் - 1. இராசன் - தவராசன் ஆகிய விசுவாமித்திரன். 2. தரு. அப் பரிசு - அவ்வாறு. கொங்கு - வாசனை. நறை - தேன். குலமலர் - சிறந்தபுட்பம். செனி - சென்னி - தலை. குலுக்கா - குலுக்கி- அசைத்து. தனிச்சிலை - ஒப்பற்றவில்.

இங்கே இராமர் தலையசைத்துக்கேட்டதைக் கம்பர், நமது மனக் கண்ணெதிரே இப்போதுதான் நிகழ்வதுபோலத்தோன்றும்படி, தொனி வருணங்களும் சொல் இரேகைகளும் கொண்டு, கவிப்படத்திற் சித்திரித்திருப்பது கவனித்து நோக்கிக் களிக்கத்தக்கது. இராமர் திருமாலின் அவதாரம் என்பதைச் 'சங்குறை கரத்தொரு தனிச்சிலை தரித்தான்' என்று நயம்படக் கூறியதும் மிக்க மகிழ்ச்சி விளைக்கின்றது.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

௨

# புதியகல்விமுறை.

## மாண்டிஸோரிமுறை.

### III

[கஅகூ-ம் பக்கத் தொடர்ச்சி].

நான் காட்சியளவையால் ஆராய்ச்சிச் சாஸ்திரத்துக்குச் செய்த வேலை யாதெனில், மூன்றுமுதல் ஆறுண்டுவரையுள்ள இளங்குழந்தைகளுடன் பழகநேர்ந்ததில் அவர்களை யுற்றுநோக்கி, அவர்களது செய்கைகளைக் கண்டறிந்து, ஒருமுடிவுக்குவந்ததேயாம். ஒரு குழந்தை ஒன்றை முதன்முறையாகக் கண்டால் அதனை ஓயாது திரும்பத்திரும்பப் பார்த்துச் சலிப்படைந்தபின்னரே அதனை நிறுத்துகின்றது. அவ்வாறுசெய்வதில் அதற்குக் களைப்பில்லை. அது தன்வேலையில் ஊக்கமாகவிருக்கும்போது பக்கத்தில் எது நடந்தபோதிலும், என்ன இருந்தபோதிலும், கவனிப்பதில்லையென்பதையும் கண்டேன். இதனால் ஒருவன் தனது வாழ்நாளிற் பலமுறைகளிற் படர்ந்தாலும் அவனுள்ளத்திற்கேற்றதொரு பொருள் தோன்றும்வரை அவனது மதிவலி புலப்படாது. அது வெளிப்பட்ட பின்னரே அவனைப் பலரும் அறிஞனென்பர். ஆகையால் இதற்கு அடிப்படையாகுநிற்பது கவனம்.

உளவர்ச்சி, (Physical Development) பக்கத்திலுள்ளவற்றைக் கண்ணுற் காண்டலினு லுண்டாகின்றதெனலாம். சிசுக்களின் சரீரம் வளருதற்குத் தாய்ப்பால் ஏற்பட்டிருப்பதுபோல, அவற்றின் உளம் விருத்தியடைதற்குப் பக்கக்காட்சிகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் அக்குழந்தைகளை இன்னதுதான்செய்யவேண்டுமென நாம் வற்புறுத்துவதற்குப் பதிலாக அவைகளுக்குத் தேவையானவை எவையெனக் கவனித்து, அப்பொருள்களையெல்லாம் அவைகள் பார்வைக்குக் கொண்டுவருதல் நன்மைபயக்கும்; என்றுலும் வெளிப்புற ஊக்கத்தின் வகையும் அளவும் இவைதாமெனக் காட்ட இயலும். சிறு குழந்தை

கள் சிறு பொருள்களிடத்தில் அதிகப் பற்றைக் காட்டும். சில வர்ணங்களைக் கண்டு களிப்படையும். சில வட்டமாயும், சதுரமாயும், கோணமாயும் உள்ள பொருள்களைக்கண்டு வியப்படையும். சில மண்ணாற் செய்யப்பட்ட பொருள்களைக்கண்டு மனமகிழும். எவ்வகைப் பொருள்களைக்கண்டால் ஒவ்வொன்றும் அதிகவிருப்பும் விடாமுயற்சியுங் காட்டுகின்றனவோ அப்பொருள்களிடத்து அவை அவ்வகையிற் பற்றுடையனவெனக் காணலாம்.

இனி அளவைப்பற்றிக் காண்போமாயின் மூன்றுவயதுக்குட்பட்ட பிள்ளைகட்குற்றது ஆறுவயதுக்குட்பட்ட பிள்ளைகட்குப் பொருந்தாது. சிறுகுழந்தைகள், பெரியோர் பல்லாங்குழியில் விளையாடக்கண்டபோது தாங்களும் அவர்களைப்போல விளையாட எண்ணிப் பல்லாங்குழியிற் காய்களைத் தாறுமாறாகப் போடுகின்றன. சற்று வயதுமுதிர்ந்த பிள்ளைகளோ அதன் எண்ணிக்கைகளை அறியாமற்போனபோதிலும், சிறுகுழந்தைகளைக் காட்டிலும் சற்றுப் புத்தியோடு விளையாடுகின்றனர் என்பதைக் கண்கூடாக அறிவோம். இந்த ஒரு உதாரணத்தாலேயே அளவு வயதுக்குத் தக்கபடி மாறும் என்பது துணிபு. என்றாலும், ஒரு குழந்தையின் தேவைக்கு அதிகமாகப் பொருள்களை நிரப்பினாலும் அக்குழந்தை பல பண்டங்களைக்கண்டு இதனிற்றான் தன்மனம் பற்றுகின்றது எனக் கண்டறிய இயலாமல் தத்தளிக்கும்; ஆதலால் அப்படியும் செய்யவிடக் கூடாது. குறைவாக இருந்தாலும் துன்பமேயொழிய இன்பமுண்டாகாது. (சில குழந்தைகள் விடாது அழுவதையும், அவற்றையுடையோர் அவ்வழுகையைநிறுத்தப் பல பண்டங்களைக் காட்டியும் ஓயாது அழுவதையும், அவை தாம் நினைத்தபொருளைக் கண்டமாத்திரத்தே அழுகையை நிறுத்தி அப்பொருளை வெகு ஆசையோடு எடுத்தணைத்துக்கொள்வதையும் அறிவோம்.) ஆகையால். குறைவானபொருள்களை வைப்பதும் தகுதியன்று. விருப்பப்படிவிடுவதும் தகுதியன்றேனும், குழந்தையின் உளவளர்ச்சிக்குச் சுயேச்சையே வேண்டியிருப்பதால் அக்குழந்தையை நல்வழியிற் புத்திசெலுத்துமாறு இயக்குவித்தல் வேண்டும்.

மேலும், மூன்றுவயதுக்குழந்தை தன் மனதுக்கியைந்த ஒரு செய்கையை நாற்பதுதடவை செய்யுமானால் ஆறுவயதுடைய ஒருகுழந்தை

அதற்குகந்த செய்கையை இருநூறுதடவை செய்ய இயலும். இதனால், மூன்றுவயதுக் குழந்தைக்குற்றது ஆறுவயதுக் குழந்தைக்கு ஏலா தென்பது புலப்படும். மேலும், வயதுக்குத்தக்கவேலையே கொடுக்கப் படல் வேண்டும். மூன்றுவயதுக் குழந்தையை எழுதும்படிசெய்தல் சாத்தியமோ? இல்லையல்லவா? பெரும் வரிவடிவுடைய எழுத்துக்களைத் தாமேதொடும்படியும் தடவும்படியும் குழந்தைகளை விட்டுவிட்டால் அவைகள் எழுத ஆரம்பிக்கும்போது எழுத்துக்களின் உருச் சரியாக எழுதப் படலாம். அதனால் கைத்தசைகளுக்கும் ஒருவித நன்மை ஏற்படும். இதுவே நான் இந்தச் சாத்திரத்துக்குச்செய்த முதலுதவியாம்.

வெளித்தோற்றம் உளவளர்ச்சி ஆரம்பிப்பதற்குமட்டும் வேண்டும். பின்னர் எப்பொழுதும் வேண்டியதில்லை. எவ்வாறு ஆகாயவிமானத்துக்கு விமானம் புறப்படும் இடம் தேவையோ அதுபோலவே உளவளர்ச்சிக்கும் வெளித்தோற்றங்கள் தேவையாயிருக்கின்றன. முன்னர்க் கூறியாங்குப் புலநுகர்ச்சியால், குழந்தைகளின் குணத்தையும் அளவையும் கண்டு உளஅறிவை வளர்த்துப் பலப்படுத்தவேண்டும். குழந்தைகள், இவ்விதம் சிறிதுசிறிதாக மனத்திற் பொருள்களை ஏற்றுப் பலமடைவதால் வேகமாக வளர்ந்து சமநிலையால் ஒழுங்கையும் அடைகின்றன. இவ்விதம் அடைவதால் அவற்றின்கல்வி விருத்தியாக இடமுண்டாகிறது. இங்ஙனம் கல்விகற்கப்பழகுவதால் அது ஒரு வேலையாக முடிந்து பழக்கமாகிவிடுகிறது. பழக்கமாகவே அறிவு தன்னளவில் முற்றி ஒழுங்கான வேலைசெய்ய இடம் தருகிறது. இவ்வளவு நூற்றத்துவங்களையும் காண்பதற்குற்றவழியாவது:—

குழந்தைகள் ஒருவேலையில் அதிகநேரம் செலவிட்டால் அதனையும் அவ்வேலை என்ன? எவ்வளவுகாலம் செலவிடுகின்றன? என்பவற்றையும், குறித்தவேலையில் அக் குழந்தைகள் செய்யும் விநோத நடவடிக்கைகளையும், ஒரேநாளில் அவை ஒரு குறித்தவேலையைச்செய்ய எவ்வளவுதரம் முயல்கின்றன என்பதையும், விடாமுயற்சியோடு செய்கின்றனவா வென்பதனையும், குறித்தவேலையையே சிலதினங்கள்வரைசெய்தால் எத்தனை முறைசெய்கின்றன என்பதனையும், மேலே விருத்தியடைய அவை எப்படிச் செய்கின்றன என்பதையும், அதைப்போன்ற வேறு ஏதாவதொரு வேலையைச் செய்கின்றனவா என்பதையும், பக்கத்தில் மனதைக் கவரக்

கூடிய வேறுவேலைகள் நடந்தும், அவற்றைக் கவனியாது, தாம் கொண்ட முயற்சியிற் கண்ணுங்கருத்துமா யிருக்குமாயின் அதனையும், வேண்டுமென அவற்றின்மனம் பிரிக்கப்பட்டகாலத்தும், அவை தாம் கொண்ட முயற்சியிலே மனத்தைத் செலுத்துமாயின் அதனையும், அவற்றின் நடவடிக்கைகளில் ஒழுங்கு, ஒழுங்கீனம் இரண்டையும், ஒருவேலையைச் செய்யுங்காலத்து அவற்றின்குணம் மாறுபடுமாயின் அதனையும், ஒழுங்காக வேலைசெய்யும்போது இன்பமேலீடு, சாவதானம் அன்பு இவைக ளிருக்கின்றனவா என்பதனையும், தோழர்களின்வளர்ச்சியில் இவற்றின்செயல் என்ன என்பதனையும், அவற்றை அழைத்தவுடன் வருகின்றனவா என்பதனையும், பிற குழந்தைகளின் வேலைகளில் இவை புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுகின்றனவா என்பதனையும், இவை அழைத்தவுடன் எப்பொழுது சரியாகவருகின்றன என்பதையும், கட்டளைக்குப் பணிவு எப்பொழுது உண்டாகிறதென்பதையும், சொல்லுவதற்குமுன் சந்தோஷமாகக் கீழ்ப்படிவது எப்பொழுது என்பதையும் கவனித்துக் குறித்துக்கொள்வதாம்.

---

## IV. ஆசிரியனமைதி.

மக்களின்மனம் மாறுபடுந்தன்மையை யூன்றிநோக்குதலே உளநூலின் உண்மையாம். அவ்வாறு ஊன்றிநோக்குவதே தொழிலாக ஒரு கலாசாலை வெகுசீக்கிரமாக ஏற்படவேண்டும். அங்ஙனம் உண்டாகுமாயின், அதுவே சிறுவர்களைத் தகுந்தவழியிற் பழக்கவும், கல்விகற்பிக்கவும் ஏற்ற இடமாகும். ஆயினும், அதற்கு முதற்காரணமாயிருப்பது ஆசிரியனது அமைதியாம், (The preparation of the teacher). சாதாரணமாகப் புதிய பூதபௌதிகநூல்களிற் பழகுவார்க்கு, அவைகளைக் கண்டுபிடிக்குமுன்னம் எவ்வளவு அடக்கமும் ஊக்கமும் விடா முயற்சியும் வேண்டியிருக்கிறது என்பது நன்குவிளங்கும். பௌதிகநூல் விற்பன்னன் ஒருவன் ஒருவஸ்துவை ஆராயுமுன் அவ்வஸ்துவையும் அதனை வைக்குமிடம் முதலியவற்றையும் சுத்தம்செய்துகொண்டு ஆராய்ந்து அறிஞன் எனப் பெயர்பெறுகிறான். அதுபோலவே, கவிஞனும் ஒவ்வொருநூலையும் வெகுநாள் பிரயாசப்பட்டுப் படித்துக் கவியியற்றிக் கவிஞன் எனப் பெயர்பெறுகின்றான். ஆயினும், அவர்கள்,

முதன்முதலாகவே (அதாவது பிறக்கும்பொழுதே) அறிஞன், கவிஞன் எனப் பிறப்புரிமையாகப் பேர்பெற்றுவந்தனரோவெனில் இல்லை; நாளடைவில் தமது விடாமுயற்சியினுல் அப்பெயர் பெற்றுர்கள். ஆயினும், அவர்கட்கு முன்னுளில் ஒருவிதமானபெருமையிருந்ததுடன், அவர்கள் சொல்வதை மற்றவர் கேட்டு அதன்படி நடப்பதும் இருந்தது. இந் நாளிலோ நூலாராய்ச்சியின்றிறனுல் ஒவ்வொன்றையும் கண்கூடாகக் காணவேண்டுமென்கின்றனர். இவ்வாறு கண்கூடாகவிளக்குவதைப் பிரத்யக்ஷப்பிரமாணம் (Experimental Science) என்று பெயரிட்டு வழங்குகின்றனர். அவ்வாறு முன்னர்ச் செய்துவந்த ஆசிரியன் இப்போது தான் ஒரு தாழ்ந்த நிலையிலிருந்துகொண்டு மாணவர்களைக் கொண்டு செய்யும்படி ஏற்பட்டிருக்கிறது. அதனுல் ஆசிரியனுக்குள்ள மரியாதை குறைகிறதென்று கொள்ளக்கூடாது. அங்ஙனம் தான் முன்னர்க் கொண்டகொள்கையைப் பலரும் சோதித்து அறியும்படி செய்வானுகில் இவன்பெருமை அளவிலடங்காததாம். ஆகையினுல் இதற்கு அடக்கம் இன்றியமையாதது. இவ் வடக்கம் எளிதில் வரக்கூடியதன்று; இதனை ஆசிரியன் உடையனுயிருத்தல்வேண்டும்.

அடுத்தபடியாகப் பொறுமை (Patience) வேண்டும். இதுவின்றி எக்காரியமும் நடைபெருது. சாதாரணமாக, நூல்களையறியாதவர்களுக்கு அவைகளை யெடுத்துச்சொல்லமுன்வந்தோமானுல், அவர்கட்கு நாம்கூறும்விடயங்களை வெகுசீக்கிரம் சொல்லாவிடில் அவர்கள், தங்கள் வேலைகளெல்லாம் பாழாய்விட்டனவென்றும், அதுவரை காலம் வீணே கழிந்ததென்றும் எண்ணுகின்றனர். ஒருவன் ஒரு விஷயத்தைப் பிறர்க்குச்சொல்லவேண்டுமாயின், அவன் வெகுஜாக்கிரதையாகவும், பிறர்கூறும் பழிப்பைக் கவனியாதவனுகவும் இருந்து சொல்லவேண்டும். அவ்வாறுசெய்வானுயின் அவனிடம் பொறுமை மிகுந்துவிடும். இந்தப் பொறுமை ஆசிரியரிடத்தில் இருக்கவேண்டியது அவசியம். இப் பொறுமையென்பது இல்லையாயின், அவர்கள் தம் மாணவர்களுக்கு ஒன்றும் கற்பிக்க இயலாதுபோவதுடன் உளநூலின் உண்மைகளையறியவும் இயலாது. அன்றியும், பொருள்நூல், ஒளிநூல், ஒலிநூல், பிரகிருதிநூல் முதலிய நூலறிஞர்கட்கெல்லாம் அந்தந்தநூல்களில் வல்லமைவேண்டுமேயொழிய மற்றவைகளில் வல்லமைவேண்டியதில்லை; இருக்கவும் மாட்டாது. சிறுவர்களையுஞ் சிறுமிகளையும் பழக்கும் ஆசிரி

யர்க்கோ ருஷிகளைப்போன்று எல்லாவிடயங்களிலும் பேரறிவுடைமை வேண்டும். பேரறிவுடைமையின்றேனும் அவற்றிற் சொற்ப அறிவும் அது இருத்தற்கு முதற்காரணமாக அடக்கமும் பொறுமையும் இன்றியமையாதனவாம்.

---

## V. சுற்றிருப்பு.

முன்னர் ஆசிரியன் இவ்வாறு அமைதிபெறுதல் வேண்டுமெனக் கூறினும். அதுமட்டுமன்று. குழந்தைகளின்வளர்ச்சிக்கு அவர்கள் இருக்குமிடமும் கல்விபயிலுமிடமும் வேண்டியாங்கு இருக்கவேண்டும். முன்னாட்களைவிட இப்பொழுது சுகவழியை உத்தேசித்து ஒருமாணவனுக்கு இவ்வளவு இடம் வேண்டுமெனவல்லவா கணக்கிடப்படுகிறது. இப்பொழுது, உடலை வளர்ப்பதற்குமட்டுமன்றி உளத்தை (மனதை) வளப்படுத்துவதற்கும் சுகவழி உபயோகப்படுத்தப்படுகிறது. அதன்படி இப்பொழுது ஏற்படுத்தப்பட்ட இடம் இருமடியாக, உளப்பெருக்குச் சுகவழியையநுசரித்து ஏற்படுகிறது. ஆயினும் முன்னைநாட்போலக் கனத்த பலகைமுதலியசாதனங்கள் இப்பொழுது வேண்டுமென்ற நியதியில்லை. எவ்வளவுக்கெவ்வளவு அவைகள் குறைகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு தாராளமாக இடமும் ஏற்படும். இதனால், சிராய்வாழப் பயில்வதற்கு இடமும், இன்பப்பெருக்கையொழிக்க வழியும் ஏற்படுகிறது.

இவைகளன்றியும், குழந்தைகள் தாங்களே தங்கள் விருப்பின்படி விளையாடும்படி விடப்படவேண்டும். கட்டுப்படுத்தப்படக் கூடாது. இருந்தாலும், உயர்ந்த இடங்களில் ஏறிக் கீழேவிழும்படி பார்த்திருக்கலாகாது. அவ்வாறு நடக்குங்கால் ஆசிரியர்கள் அவர்களுடைய நடையைத் திருத்தவேண்டும். நமது முன்னோர்கள் எவ்வளவு சீரும் சிறப்புமாக வாழ்ந்துவந்தார்கள் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும்படி செய்யவேண்டும். அவர்கள் தாங்களே குளிக்க முழுகப் பழகும்படி செய்யவேண்டும். அதற்குத் தகுந்தகருவிகளையும் அமைக்கவேண்டும்.

---

## VI. கவனம்.

சாதாரணமாகக் குழந்தைகள் ஒருபொருளைக்கண்டால் அதனை விடாது பற்றிக்கொண்டு சிறிதுநேரம் விளையாடுவது இயற்கை. இது உளத்திலிருந்துண்டாகும் ஒருவித ஆசையால் ஏற்படுவது. உளவளர்ச்சிக் குற்றதொரு செய்கையாகும். நீர்வேட்கையுடையா னொருவன் எவ்வாறு இரண்டொருசொட்டு நீரால் வேட்கைதணியாது நிரம்பப் பருகி வேட்கைதீர்த்துக்கொள்வானோ அவ்வாறே குழந்தைகளும் தாம் ஒருமுறைசெய்த செயலை மற்றொருமுறை செய்வதற்காகப் பூரணமாக அறிந்துகொள்ளும். இதுதான் உளவளர்ச்சியின் தத்துவம். சிலர் இளங்குழந்தைகளின் மனத்தை ஒரு பொருளிலோ அல்லது வரிசையிலோ திருப்புவது இயலாதகாரிய மென்கின்றனர். அது முழுவதும் உண்மையே; ஆயினும், குழந்தைகள் ஒருபொருளிற் கவனஞ்செலுத்தும்போது தம்மைச்சுற்றி வேறு என்னநடந்தாலும் கவனிப்பதில்லையன்றோ? ஆகையால் அவர்களின் உளவளர்ச்சி இயற்கையமைப்பான் (Nature) உண்டாவது என்று கொள்வதே தகுதியாம்.

இவ்வியற்கையமைதி யுண்டென 'நீக்கம்' Purgatario XVIII என்னும் நூலில், 'மனிதனுக்கு அவனது புத்தி எப்படி எண்ணங்களை (நினைப்பை) உதிக்கச்செய்ததென்பது தெரியாது. விருப்பமே முதன் முதலான தாக்கல் என்பனைதயும் அறியான். வண்டுகள் தேனைச்சேர்க்க முயல்வதுபோல் உன்னிடமும் ஒரு ஆவல் உண்டு' என்று வெகுகாலத்திற்குமுன்னரே டாண்டேஎன்பவர் கூறியிருக்கிறார். மனிதர்க்கு வெளித்தோற்றங்களையறிய ஒரு விருப்பம் உளது. அவ்விருப்பத்துக்கு அந்தக்காரணம் காரணமாக இருக்கிறது. இதுவன்றி நாம் ஒருவன்வரவை எதிர்பார்த்தி[illegible]ப்போமாயின், அவன் வெகுதூரத்திற் காணப்படும் போதே [illegible]ன்தானென ஊகிப்ப தெப்படி? அது பொறியுணர்ச்சியாலும் அ[illegible] வரவேண்டுமென்று எதிர்பார்த்தலினாலும் உண்டாவது.

இந்த வரவுபார்த்தலே (Expectation) தயாரித்தல் (Preparation) அல்லது நினைவுக்கருவிகளை வளர்த்தல் என்று சொல்லப்படும். இதனுலேயே வெகுதூரத்திற் காணப்படும் பொருள் இன்னதென்றும், வெகு மெதுவாகக் கேட்கும் ஓசை இன்னதென்றும் அவரவர்கட்குப் புலப்படுகிறது. இதுபோலவே, ஆசிரியரின் ஒழுக்கமும், குழந்தைகளை அவர் ஏதோ ஒன்று கற்பிக்கப்போகின்ருரென எதிர்பார்த்திருக்கும்படி செய்வதாய் இருக்கவேண்டும்.

இதுபோலவே, குழந்தைகளிடத்தும் சாவகாசத்திற் பலவித வர்ணங்கள், உருமானங்கள், தொனிகள் முதலானவைகளைச் சிறிதுசிறிதாகக் காட்டுவதால் அவைகள் மனதிற்பதிந்து ஒரு ஒழுங்காகி இது நீட்சி, இது குறுக்கம், இது வட்டம், இது சதுரம், இது வளைவு, இது பிறை, இது சிவப்பு, இது கருப்பு, இது வெண்மை என்பது முதலிய பாகுபாடுகள் எளிதிற் புலப்படும். இதுதான் குழந்தைகளை எதிர்பார்க்கச்செய்வதென்பது. இவ்விதமாகக் குழந்தைகளின் கவனத்தை ஒருவழியிற் திருப்பியவுடனே இயற்கை அவ்வழியைப் பூர்த்தி செய்கின்றது. ஆகையால், குழந்தைகளின் நோக்கம் எவ்வழியிற் செல்கிறதோ அவ்வழியில் அதனைப் பெருக்குவதே குழந்தைகளின் கவனத்தைக் கவர வழியாம்.

இலக்கணவிளக்கம் வைத்தியநாததேசிகர் பரம்பரை,

சோமசுந்தரதேசிகன்,

திருவாரூர்.

# அருவியன் காதை.

(உஉ0-ம்பக்கத் தொடர்ச்சி).

கூடு கார் இருள் மூடு பாதலம்
ஊடு புக்கு பல் காதம் மேல்
வீடு சேவகன் நாடு வெஞ்சிலை
ஓடும் ஓர்சரம் என்னவே
சூடலாம் கதிர் தோயும் விண்ணெனும்
தூய்மை சால் இடம் உய்த்துராய்க்
காடுங் கானமும் நாடும் நண்ணினர்,
நால்வர் மேல் நடை எண்ணினர். (103)

"வையகத்துறை மாந்தரும் அறம்
வையகத்துறை மாதரும்
உய்யவந்த மருந்தினை,
உவட்டா அருங்கண் விருந்தினை,
செய்யும் நன்மை மிகச்சிறந்துரு
வாய்த் திரண்டெழு செல்வியை,
நையும் நுண்ணிடையார்கள் நாயகம்
ஆய் நலம் கிளர் நாரியை, (104)

இல்லறம் எனும் தாரு ஓங்கியே
இன்பலர்ந்து கமழ்ந்திட
நல்லறம் எனும் ஆறுபாய் அமு
தாகும் நீரினை, சீரினை,
மல்லல் மாடவிர் மாலையை,
மறுவின்றி வந்தொளிர் இந்துவைச்
சொல்லல் ஆவதுமல்ல ஆகிய
சோதியை, உருதேசியை, (105)

எத்திறத்தினில் அண்டுவேம்? உயிர்
எத்திறத்தினிற் பற்றுவேம்
இத்துணைப்படர் இன்னலை இது
காறும் யாமும் அறிந்திலேம்;

'பைத்தா உருவோடு பற்றுதிர்'
என்னவும் பதி நம்மிசை
வைத்த மேலுரை உள்ளின் ஊடுறை
வாள் என அற ஈர்வதே" (106)

என்று கூறினர், ஒன்றும் எண்ணுவ
தோர்கிலர், வினை தேர்கிலர்,
நின்ற தூணெனப் பொன்றினர், உயிர்
பொன்று கில்லவர் என்னவோ?
மன்றலங்குழல் மாதாள் எழில்
வந்த தூதர்கள் சிந்தையைத்
துன்று தீமை அகன்று சாய்தாச்
சுற்றி மூடின முற்றுமே; (107)

விண் மறந்தனர், விண்ணின் ஊடுழல்
மீன் மறந்தனர், தாம் உறை
மண் மறந்தனர் மக்கள் புள் விலங்
கான வவ்வுயிர் வாழ் இடம்
எண் மறந்தனர், எங்கும் என்றும்
எலாம் மறந்தனர் என்ப, தம்
கண் மறந்தனர் அல்லர்; அங்குறை
பெண் மறந்தன ரல்ல ரால். (108)

அன்னகாலை அந்நால்வரில் அகம்
ஐய வெய்யவன் ஆகியே
இன்னகாலையில் அண்முவே மென
யாதும் முற்குறி சாதியா
தின்னல் வாய் உயிர் பற்று தீயன்,
இரக்கம் அற்ற உருக்குளன்,
வன்னி சாம்பரின் வாய் எழும்பிய
வாறு வந்துரை சீறுவான். (109)

"நன்மை என்பன, தீமை என்பன,
நாடொறு வன்மை என்பன,
மென்மை என்பன, மேல என்பன,
கீழ என்பன, மெய் எழிற்

நன்மை என்பன, அன்மை என்பன,
ஆன வேற்றுமை சாற்றிடின்,
இன்மை என்பன வன்றோ? நம்மிடை
இன்றை உள்ளன ஆகுமோ?" (110)

என்று கூறி இருண்டு புன்மனம்
ஏதமோடு புகைந்தயல்
நின்ற ஒருரசச்செடிக்குள் அந்
நீசன் பாம்புருத் தாங்கியே
சென்றிருந்தனன், செல்வியாம் உரு
தேசி இன்னுயிர் தீர்தரப்
பொன்றுவிப்பன் எனப் புகன்று தன்
புன்மையில் தலை போயவன். (111)

(வேறு)

அணங்கும் அவ்வயின் அடைந்தலர் கொய்தரு காலை
வணங்கும் நுண்ணிடை வார்குழல் திருமலர்க் காமும்
பிணங்கு கொம்பரும் பின்னிடக் கடித்தவன் பெயர்ந்தான்,
உணங்கல் உற்றன உயிரினோடுயிர் இலா உலகும். (112)

கையைவாங்கினள், கடித்ததென்னும் எனக் கருதப்
பையராவினைப் பார்த்தலும் பதைத்துடல் துடித்தாள்,
மையழிந்திடக் கண் கலுழ் சிந்தினள், மனத்தே
செய்யத் தக்கன தெரிகிலாள் தெருமரலுற்றாள். (113)

நடுங்கினள், உளம் நைந்தனள், நலம் தரும் உடலம்
ஒடுங்கினள், உலர்ந்தாள் கங்கினிடை உய்த்த மலர் போல்,
கொடுங்கணார் செய்த வினைப்படும் கூட்டமே ஒப்ப
அடங்கல் ஆகமும் அரும்பினள் வெயர்த்துளி அந்தோ. (114)

(வேறு)

மாந்தளிர் மேனிய மங்கையாம் அவள்
தான்தனி இடர்ப்படச் சலம் கொள்கின்றிலள்,
ஆந்துணை என்ன அன் றணைந்த அன்புசால்
காந்தனை எண்ணி உள் கலங்கிச் சாம்புவாள். (115)

தீயகம் நுழைதரத் திகைக்கும் நெஞ்சினள்,
சாயகம் பட உயிர் தவிக்கும் மா னென
வாயகம் திறக்கிலள், மறுகினுள், வரு
நாயகன் தனிமையை உன்னி நையுமால் (116)

எண்ணிலர் தனைமணம் இயற்றுவான் முனம்
நண்ணின காலை யாழ் நாயகன் வர
உள் நிறை நாணொடும் ஒதுங்கினுரெனக்
கண் நிறை காதலன் கவினும் எண்ணுவாள். (117)

சீரிய குணங்களால் தெளிந்த ஞானத்தால்
காரிய வலிமையால் கருணை மேன்மையால்
நாரியர் நயப்புறு நலத்தினுல் ஒளிர்
ஆரியர்ப் பிரிவதும் ஆற்றல் ஆவதோ ? (118)

தந்தை தாய் உலகினில் தநயர் முன்னுயிர்
சிந்துவர் ஆதலின் திகழ் மணத்தினுல்
மைந்தரைப் போற்ற நன்மாது வேண்டுவர்
நிந்தையன்றே இவர் நீத்துச் செல்லினே. (119)

"தன்னுயிர் என்னினும் தையலார்க்கமை
மன்னுயிர் என்னினும் வதுவை ஆற்றினுல்
இன்னுயிர் ஒன்றுவ தியல்பன்றே; எனின்
என்னுயிர்க் கிவ்விடர் இடுக்கண் ஆகுமோ ?" (120)

இன்னணம் பற்பல எண்ணும் எல்வையில்
பொன்னனங்கும் விடம் பொறுக்கலாது பூம்
கன்னலின் மேலொரு கமலம் பூத்தெனத்
தன் எழில் முகம் கரதலத்திற் சாய்த்துமே ; (121)

ஆற்றெணு விடம் மலிந் தாகம் எங்கணும்
கூற்றென நிறம் எலாம் கொள்ளை கொண்டிடத்
தோற்றமும் உணர்ச்சியும் துறந்து வீழ்ந்தனள் ;
தேற்றம் உண்டோ எனத் திகைத்த தண்டமே. (122)

K. N. சிவராஜபிள்ளை B.A.,

ஸ்ரீ:

# மதிப்புரை.

## I. புத்தகங்கள்.

1. திருஞானசம்பந்தர்.—இது, மேரியரசியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும், 'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய ஸ்ரீமத். கா. நமச்சிவாயமுதலியாரவர்களால் தெளிவான செவ்விய தமிழ்நடையிற் கலாசாலை மாணவர் விரும்பிக் கற்குமாறு இடையிடையே பொருத்தமுள்ள பாடல்களும் படங்களும் சேர்த்தெழுதிப் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இதன் விலை அணா 10. வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதிப் பெறலாம்.

2. பெரியபுராணச்சுருக்கம் (முதற்பகுதி):— இது, சென்னை, ஸி. குமாரஸாமிநாயுடு கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. பெரிய புராணத்தினின்று சில நாயன்மார் சரித்திரங்களை சுருக்கிச் செய்யுளும் உரைநடையும் விரவிவரும்படி எழுதப்பட்டது. கலாசாலை மாணவர்க்குப் பாடமாக வைக்கத்தக்கது. இதன்விலை அணா 14. வேண்டுவோர் மேற்காட்டிய கம்பெனிக்கு எழுதிப் பெறலாம்.

3. சசிகுலதீபம்:—இது, உடுமலைப்பேட்டை ஸ்ரீமத். U. N. இராமசாமிநாயுடு அவர்களால், மஹாபாரத தத்துவார்த்தங்களில் முக்கியமான சிலவிஷயங்களை ஆராய்ச்சிமுறையாக வசனநடையில் எழுதப் பெற்றிருக்கிறது. இதன்விலை அணா 6. வேண்டுவோர் U. N. இராமசாமி முதலியாரவர்கள், பசுபதிமுதலியார்வீதி, உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர்ஜில்லா என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

4. பாலபாகவதம்.—இது, பாகவதபுராணத்தின் முக்கியமான கதாபாகங்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கலாசாலை மாணவர் தெரிந்துகொள்ளும்படி தமிழ்நடையில் எழுதி ஜயம் அண்டு கம்பெனியிற் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. இதன் விலை அணா 5. வேண்டுவோர் ஜயம் அண்ட் கம்பெனி, 35 ஹைரோட், எழும்பூர், சென்னை என்றவிலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

5. திருவோத்தூர் நான்மணிமாலை:—இது, சேயாறு போர்டு ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். சோ. வீரபத்திர பிள்ளையவர்களாற் பாடப்பெற்றது. ஸ்ரீமத். வீ. திருஞானசம்பந்த முதலியாரவர்கள் எழுதிய குறிப்புரையுடன் பதிக்கப்பெற்றது. இதன்விலை அணா 3. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

6. அருச்சுனன் தீர்த்தயாத்திரை:—இது, பவானி தளவாய்ப் பேட்டை ஸ்ரீமான். தே. ர. அரங்கநாதக்கவிராயரவர்களியற்றிய ஆயிரத்து நானூற்றுமுப்பத்தேழு பாட்டுக்களுடையது. பலபுலவர்கள்பாடிய சாத்துக்கவிகளுடன் பதிக்கப்பெற்றது. இதன் விலை ரூபா 2. வேண்டுவோர் தே. ர. வேங்கடராம செட்டியாரவர்கள், குமாரபாளயம், பவானி என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

## II. பத்திரிகைகள்.

1. வேதம்:—இது, ரிக்வேதத்தைத் தமிழில் மொழிபெயர்த் தியற்றிய பாடல்களையும் அவற்றின் உரையையும் உடையதாய், ரங்கோன் பார்வீதி (31, 32) வேதபீரோவினின்று மாதாந்தா ஸஞ்சிகையாக வெளி வருவது. இதன் ஆசியர் சிவத்தியானாநந்தமஹர்ஷி யாவர். தனிக் காப்பி விலை ரூபா. 1. மற்றவிவரங்கள் ஷை வேதபீரோவுக்கு எழுதித் தெரிக.

2. ஜனரஞ்சனீ:—இது, ஸ்ரீமத். M. S. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களால் வெளியிடப்படும் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதில், ஜனஸமூகம், கல்வி, தேச சரித்திரம், மதம், சாஸ்திரங்கள், சிறுகதைகள், வேடிக்கை முதலிய விஷயங்கள் வெளிவரும். இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா 2. வெளிநாடுகளுக்கு ரூபா 3. வேண்டுவோர் V. நாராயணன் & கம்பெனி, 4, கொண்டிசெட்டிதெரு, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

3. பைந்தமிழ்:—இதுவும் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் முதற்றொகுதியின் முதற்பகுதி நமது பார்வைக்கு வந்தது. இதன் வருடச்சந்தா ரூபா 2–8–0. வெளிநாடுகளுக்கு ரூபா 3–12–0 வேண்டுவோர் மானேஜர், பைந்தமிழ், திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதுக.

4. செந்தமிழ்ச்செல்வி:—இது, தமிழறிஞர்களால் எழுதப்பட்ட பல விஷயங்களுடன் வெளிவரும் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா 3. வெளிநாடுகளுக்கு ரூபா 3—8—0. வேண்டுவோர் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 306. லிங்கச்செட்டித்தெரு, ஜி. டி. சென்னை, என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

5. தமிழ்:—இது, யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கழகத்தாரால் வெளியிடப்படும் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதில், தமிழறிஞரால் எழுதப்பட்ட விடயங்கள் பல உள்ளன. இதன் வருடச்சந்தா ரூபா 3. வேண்டுவோர், யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கழகத்தின் காரியதரிசி ஸ்ரீமான். சி.இ. இராசரத்தினம் B.A., அவர்களுக்கு எழுதிப் பெறலாம்.

6. ஆயுள்வேதம்:—இது, வைத்தியம், சுகாதாரம் முதலானவைகளில் வேண்டிய விஷயங்களைக்கொண்டு மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்வைத்தியஸஞ்சிகை. இதன் வருடச்சந்தா ரூபா 1. வெளிநாடுகளுக்கு ரூபா 1—4—0. வேண்டுவோர் இதன் ஆசிரியரான வேலூர் ஸ்ரீ ராம. வே. தாஸ் அவர்களுக்கு எழுதிக்கொள்க.

7. ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்:—இது, ஆங்கிலத்திலும் தமிழிலும் விஷயங்கள் எழுதப்பட்டுவரும் ஒரு மாதப்பத்திரிகை. இதில் வைத்தியவிஷயங்களும் சுகவழியும் வெளிவரும். இதன் வருடச்சந்தா ரூபா 3. தனிப்பிரதி அணா 6. வேண்டுவோர் திருநெல்வேலி டாக்டர் அன்னா தாமஸ் அம்மாளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

8. தாய்நாடு:—இது, திங்கட்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தேசிய வாரப்பத்திரிகை. இதன் வருடச்சந்தா ரூபா. 5. வெளிநாடுகளுக்கு ரூபா 6—8—0. வேண்டுவோர் மானேஜர், 'தாய்நாடு' ஆபீஸ், திருச்செங்கோடு என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

௨

# 1923-ம் ௵ ஏப்பிரல் ௴ 30௳ (ருதிரோற்காரி ௵ சித்திரை ௴ 18௳) மாலை 4-30 மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகசபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வரசேதுபதி மன்னரவர்கள்—அக்கிராசனாதிபதி.
2. மகா-௱-௱-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C.
3. ,, M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.,
4. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.,
5. ,, K. ராமையங்காரவர்கள் B.A., B.L.,

இவர்கள் வந்திருந்தார்கள்.

## தீர்மானங்கள்.

I. 1922-ம் ௵ ஆகஸ்டு ௴ முதல் 1923-ம் ௵ மார்ச்சு ௴ முடிய உள்ள சங்கம் வரவுசெலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. 1922—23-ம் வருஷத்திய சங்கம் வரவுசெலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கத்தின் வருஷாந்தக் கணக்குகளைப் பரிசோதனைசெய்வதற்கு மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களை ஆடிட்டராக நியமிக்கலாயிற்று.

IV. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

1. மகா-௱-௱-ஸ்ரீ ராய. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள், பத்திராதிபர், "தனவைசியஊழியன்", காரைக்குடி.
2. ,, K. கிருஷ்ணையரவர்கள், Short Hand Sub Inspector of Police, Short Hand Bureau, வேலூர்.
3. ,, கா. உ. பொன்னுச்சாமி முதலியாரவர்கள், தமிழ்ஆசிரியர், போர்டு செகண்டரி பாடசாலை, உத்திரமேரூர், செங்கற்பட்டு ஜில்லா.
4. ,, T. K. சிதம்பரநாதமுதலியாரவர்கள், B.A., B.L., வக்கீல், வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி.

மதுரை,
30-4-1923.

B. இராஜராஜேஸ்வரசேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.